Registred as a News Paper பக்கங்கள்: 08 விலை ரூபா: 6-00

# ஈழநாதம்

வெள்ளி மஞ்சரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2022 மார்கழி 26 (10-01-1992) வெள்ளிக்கிழமை ஓசை: 326

## இவ்வருட முடிவிற்குள் கச்சேரிமுறை ஒழிப்பு

(கொழும்பு)

194 வருடங்கள் பழைமை வாய்ந்த கச்சேரி முறை இந்த வருடம் முடிவடைவதற்குள் ஒழிக்கப்பட்டு விடுமென பொது நிர்வாக அமைச்சு அறிவித்துள்ளது.

வடக்குக் - கிழக்கிலுள்ள அமைதியான பிரதேசங்கள் உட்பட நாட்டின் ஏனைய சகல பகுதிகளிலும் பிரிவுச் செயலகங்கள் அமைக்கப் படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அம்பாறையில் பல முனை மோதல்

# 9இராணுவம் பலி: ஆயுதங்கள் மீட்பு

## கவச வாகனம் சேதம்; ஒரு புலி வீரமரணம்

(மட்டு அம்பாறை)

அம்பாறை - மட்டக்களப்பு எல்லையோரத்தில் விடுதலைப்புலிகளுக்கும், சிறிலங்கா இராணுவத்தினருக்குமிடையில் நேற்று பலமுனைகளில் கடும் மோதல் இடம்பெற்றது. இம்மோதலின்போது ஒன்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். பலர் காயமடைந்தனர். கவச வாகனமொன்று சேதமடைந்தது. பலரக ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

விடுதலைப்புலிகள் தரப்பில் ஒரு போராளி வீரச்சாவை எய்தினார்.

இம்மோதல்கள் பற்றித் தெரியவருவதாவது: நேற்றுக் காலை 7.30 மணியளவில் மட்டக்களப்புமாவட்டத்திலுள்ள பாலையடிவெட்டை இராணுவ முகாமிலிருந்து வெளியேறி அம்பாறை மாவட்டத்திலுள்ள 36 ஆம் கிராம இராணுவ முகாம் நோக்கிரோந்து சென்றுகொண்டிருந்த 35க்கும் மேற்பட்ட சிறிலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் அதிரடித் தாக்குதலை நடத்தியதோடு இம்மோதல் ஆரம்பித்தது. இத்தாக்குதலின்போது ஒன்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ஏனையோர் காயங்களுடன் முகாம்களுக்குத் தப்பி ஓடினர் இதேவேளை இவர்களுக்கு

(8ஆம் பக்கம் பார்க்க)



சங்கானையில் கடந்த முதலாம் திகதி தமிழீழ காவல் துறையினரது காவல் பணிமனையை யாழ். மாவட்டத் தளபதி திரு. செந்தாளன் திறந்து வைக்கும்போது எடுக்கப்பட்ட படம். அருகில் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் காணப்படுகிறார்.



கோப்பாயில் கடந்த முதலாம் திகதி தமிழீழ காவல் துறையினரது காவல் பணிமனையை விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. பாவரசன் (பைப்) திறந்து வைப்பதையும், அருகில் காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் நிற்பதையும் படத்தில் காணலாம்

## வீரச்சாவு

### நளினன், 2ஆம் லெப்.ஜோசப், பரந்தாமன்

நேற்றுக் காலை மட்டக்களப்பு- அம்பாறைமாவட்ட எல்லையோரத்தில் உக்கிர மோதலின் போது விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த நளினன் (சின்னக்கண்ணன்- புல்லுமலை, மட்டக்களப்பு) வீரச்சாவை தழுவிக்கொண்டார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## பெண்கள்மீது தாக்குதல்; கடும் நடவடிக்கை

### காவல்துறைப் பொறுப்பாளர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

கோப்பாயில் இளம் பெண் ஒருவர் மீது தாக்குதல் நடாத்திய ஆண் ஒருவரை தமிழீழக் காவல் துறையினர் கைது செய்துள்ளனர்,

தாக்குதல் சம்பவம் நடைபெற்ற சமயம் அவ்வூர் பொதுமக்களின் ஒத்துழைப்புடன் காவல்துறையினர் தாக்குதல் நடாத்திய நபரைகைதுசெய்து காவல் பணிமனையில் தடுத்து வைத்திருக்கின்றனர்.

(8ஆம் பக்கம் பார்க்க)

## சமஷ்டி மூலம் மக்கள் நாட்டைக் காக்க விருப்பம்

### - அஸ்வர்

(கொழும்பு)

"சமஷ்டி ஆட்சிமுறை என்றால் அதை நாட்டைத்துண்டாடுவதே என்று கருதிய தென் இலங்கை மக்கள் இப்போது தமது கருத்தைமாற்றி நாடு துண்டாடப்படுவதைவிட சமஷ்டி முறை ஆட்சியை உண்டாக்கி நாட்டைக் காக்கவேண்டும் என்று கூறத் தலைப்பட்டுள்ளார்கள். இது ஒரு நல்ல அறிகுறியே"

இவ்வாறு முஸ்லிம் சமய, கலாசார இராஜாங்க அமைச்சர் எச். எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

# மூன்று மாதங்களுக்குள் புலிகளுடன் பேசவேண்டும்

## அரசுக்கு தொண்டா காலக்கெடு

(கொழும்பு)

காலம் விரைவாக சென்றுகொண்டிருப்பதாகவும், விடுதலைப்புலிகளை பேச்சுக்கு அழைப்பதானால் மூன்றுமாதத்திற்குள் அதனைச் செய்தாக வேண்டுமென்றும் அமைச்சர் தொண்டமான் நேற்று பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் எடுத்துரைத்தார். இந்த சமரச முயற்சி மூன்று மாதங்களுக்கு மேல் நீடிக்குமானால் அது பயனற்றுப் போய்விடும் என்றும் அவர் தெரிவித்தார்.

தனது தீர்வுத் திட்டம் மீதான வாக்குவாதம் யாழ்ப்பாணம் மேற்கொள்ளவிருந்த பயணத்தைத் தாமதப்படுத்திவிட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத் தெரிவுக் குழு இன்றும் மற்றும் சர்வகட்சி மாநாடு ஜனவரி 21 ஆம் திகதியும் கூடி தீர்வுத் திட்டத்தை ஆலோசனைக்கெடுக்க உள்ளன. இந்தக் கூட்டங்களுக்குப் பிறகு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும் திகதியைத் தீர்மானிக்கலாம். இந்த

(8ஆம் பக்கம் பார்க்க)

## சண்டையை நிறுத்துவதற்கு இதுவே நல்ல தருணம்

சண்டையை ஒரு முடிவுக்குக் கொண்டுவருவதற்கு இதுவே நல்ல தருணமாகும். சண்டையினால் மக்களும் களைப்படைந்துள்ளார்கள். பெரும் தொகைக் காசும் செலவாகிவிட்டது. இளைஞர்களும் செத்து மடிகின்றார்கள் என்றார் தொண்டமான்.

வடக்கையும், கிழக்கையும் என்ற கருத்தை ஜனாதிபதி பிரேமதாஸா உட்பட முன்னர் பலர் வெளியிட்டிருக்கின்றார்கள் என்பது இத் திட்டத்தில் முக்கியமானது என்று கூறிய தொண்டமான், வடக்கு-கிழக்கு இணைப்பு என்ற வாசகத்தை நீங்கள் விரும்பாவிட்டால், வேறெந்தப் பெயரை வைத்தாவது அழையுங்கள். இப்போதைய திட்டத்தில் ஒரு உண்மையும் உண்டு. அது நிரந்தரமான வடக்கு-கிழக்கு இணைப்பாகும். இதைப் பற்றிக் கவலைப்படுவதற்கு என்ன இருக்கிறது என்றார்.

## யாழ்ப்பாண. பிரவேசிக்க தயார் நிலையில் இராணுவம்

### சிறில் ரணதுங்கா

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடா நாட்டிற்குள் சிறிலங்கா இராணுவம் செல்ல தயார் நிலையில் உள்ளது என பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில்ரணதுங்கா தெரிவித்துள்ளார். நேற்று நடைபெற்ற வாராந்த பத்திரிகையாளர்

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## சிறிலங்காவிற்கு இராணுவ உதவி

## பிரிட்டன் தயக்கம்; சிறிலங்கா மறுப்பு

(கொழும்பு)

சிறிலங்காவிற்கு இராணுவ உதவிகளை வழங்க பிரிட்டன் மறுத்துவிட்டதாக நேற்றைய ஐலன்ட் பத்திரிகையில் வெளிவந்த செய்தியை, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர்ஜெனரல் சிறில்ரணதுங்கா மறுத்துள்ளார்.

(8ஆம் பக்கம் பார்க்க)

# உடன் தேவை

1. சிட்டை எழுதுநர்
2. சமையற்காரர் [தோசை, போளி, இடியப்பம்]
3. பரிசாரகர் [சப்பிளையர்]

25 வயதிற்கு மேற்பட்ட, கடை அனுபவம் உள்ள விண்ணப்பதாரர்கள் 11.01.1992 சனி காலை 10.00 மணிக்கு நேரில் வரவும்.

**சுவையருவி**
**மின்சாரநிலைய வீதி,**
**யாழ்ப்பாணம்.**

(சி-3761)

# தமிழர் நலன் காக்கும் ஒன்றியம்

**தமிழர் நலன் காக்கும் ஒ றியத்தின் உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கான**

**கலந்துரையாடல் நடைபெறவுள்ள விபரம்**

| உ. அ அதிபர் பிரிவு | காலம் | இடம் |
| --- | --- | --- |
| யாழ்ப்பாணம் | 11-01-1992 சனிக்கிழமை பி.ப. 2-30 மணி | புனித மரியாள் கல்லூரி யாழ்ப்பாணம் (அடைக்கலமாதா கோயிலடி) |

இக் கலந்துரையாடலில் பொது ஸ்தாபனங்கள், பொதுமக்கள் கலந்து கொள்ளும்படி அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

09-01-1992 (2089) இணைப்பாளர்

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்**
**யாழ்ப்பாணக் கிளை**

# சமூக நலனும் சமுதாய சேவையும்

**பயிற்சி நெறி**

[Social welfare and Community Service Course]

மேற்படி பயிற்சி நெறி பயில விரும்புவோரிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பயிற்சி இலவசமாக நடாத்தப்படவுள்ளது. ஆர்வமுடையோர் தமது அனுபவம்ஆற்றல், கல்வித்தகைமை ஆகியவற்றை எமக்கு 17-01-92 க்கு முன் அனுப்பிவைக்கவும். தேர்ந்தெடுக்கப்படுவோர்க்கான பரீட்சை 18-01-92 பிற்பகல் 2 மணிக்கு எமது பணிமனையில் நடைபெறும்.

73, கண்டி வீதி, கௌரவ செயலாளர்.
யாழ்ப்பாணம்,
12-01-92

(சி'3758)

**யாழ். மாவட்ட சி. க. வ. கூ. ச. சமாசம்**
வரையுள்ளது

# பாடசாலை உபகரண விநியோகம்

மாணவர்களுக்கு / மாணவசேமிப்பு அங்கத்தவர்களுக்கு/ சங்கங்களுக்கும் யாழ் மாவட்ட சி. க. கூ. சங்கங்களின் சமாசத்தினால் கொழும்பிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட அப்பியாசக் கொப்பிகள் ஏனைய பாடசாலை உபகரணங்கள் மாணவ சேமிப்பு அங்கத்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. மேற்படி உபகரணப் பொருள்கள் தேவையானவர்கள் 13.1.1992 ற்கு முன்னர் யாழ் மாவட்ட சி.க.கூ.ச சமாசத்துடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகின்றோம். குறைந்த தொகைப் பொருள்களே கையிருப்பில் உள்ளன. 13-1-1992 இன் பின்னர் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம். எனவே கூடிய விரைவில் சமாசத்துடன் தொடர்பு கொண்டு உங்களுக்கு வேண்டிய பொருள்களைப் பெற்றுக் கொள்ளவும். மேலதிக விபரங்களை யாழ் மாவட்ட சி.க.கூ.ச சமாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

நன்றி!

மாவட்டச் செயலாளர்
**யாழ். மாவட்ட சி. க. வ. கூ. ச. சமாசம்,**
**18 1|4, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்:**

(சி 3760)

## வரி விளம்பரம்

### தவறிவிட்டது

இணுவில் ஆஸ்பத்திரி முகாமில் வசிக்கும் தம்பிஐயா றஞ்சினிதேவியின் சிவப்பு நிற கைப்பை ஒன்று அளவெட்டி அருணோதயா கல்லூரிக்கு அருகாமையில் [சிங்கப்பூர் சங்கிலி] பென்ரனுடன் 2 பவுண் நிறையுள்ள சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தமிழீழ காவல்துறையினரிடம் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (2082)

### வேப்பெண்ணெய்

பயிர்களைத் தாக்கும் நோய்கள், பூச்சிகளைக் கட்டுப்படுத்தவும், கிருமி நாசினியாகவும், மருத்துவ தேவைகளுக்கும் வேப்பெண்ணெய் உதவுகிறது. சுத்தமான வேப்பெண்ணெய்க்கு ''மில்க்வைற்'' லேபலைப் பார்த்துவாங்குங்கள். (சி/3754

### நிர்வாகிகள்

நாயன்மார்கட்டு சனசமூக நிலைய மாதர் சங்கத்தினரின் வருடாந்த நிர்வாகிகள் தெரிவு கடந்த 05.01.92 அன்று நடைபெற்றது. செல்வி கு. கமலாஜினி தலைவியாகவும் செல்வி த. சிவசோதி செயலாளராகவும் த. உதய சௌந்தரி பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையத்தின் 1992 ஆம் ஆண்டிற்கான நிர்வாகிகள் தெரிவு கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று நடைபெற்றது. திரு.பொ. இராமநாதன் தலைவராகவும், திரு.ப. சாந்தகுமார் செயலாளராகவும் செல்வன் சி. தேவகுமார் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

**புதிய**
**உயர் கல்லூரி**
**NEW COLLEGE OF HIGH STUDIES**

**G. A. Q. 92**

ஏப்ரல்
பரீட்சைக்குரிய
சகல
பாடங்களுக்குமான
வினா விடை
வகுப்புக்கள்

**ஆரம்பம்:**
**11 01-92**

நிர்வாகி
S. அருள்நங்கை
(சி/3756)

**புதிய**
**உயர் கல்லூரி**
**New College of High Studies**

**A L 93**

வர்த்தகம்
கலை

புதிய பிரிவு
ஆரம்பம்
11 - 01 - 92
(1 மணி)

(ஏனைய பாடங்களும் ஆரம்பமாகி விட்டன)
(சி-3757)

ஜெய்ப்பூர் செயற்கைக்கால்

# வந்து சேர்ந்தது 30, பயன்படாதது 14

யாழ்.ஜெய்ப்பூர்செயற்கைக் கால் நிறுவனத்திற்கு கொழும்பில் இருந்து அனுப்பிவைக்கப்பட்ட முப்பது செயற்கைக் கால்களில் பதின்நான்கு கால்கள் பயன்படுத்தமுடியாதவை என அதன் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த ஒருவருடமாகக் கூட்டுப்படைத் தலைமையகம் வடபகுதிக்குத்தேவையான செயற்கைக் கால்களை அனுப்பத் தடை விதித்திருந்தது தெரிந்ததே.

ஜெய்ப்பூர் செயற்கைக்கால் நிறுவனத்தின் அதிகாரிகள் தொடர்ச்சியாக விடுத்தவேண்டுகோளை அடுத்து கடந்த நவம்பர் மாதம் முப்பது கால்களை மட்டும் அனுப்பக் கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியது

இவற்றில் பதினாறு கால்கள் மட்டுமே பயன்படுத்தக் கூடியதாக இருந்தது. அதிலும் இரண்டு கால்கள் மட்டுமே தற்போது பொருத்தப்பட்டுள்ளன. மீதி பதின்நான்கும் பதினாறு வயதிற்குட்பட்டசிறுவர்களுக்குப் பொருத்தக்கூடியவை

தற்பொழுது நானூற்றி ஐம்பது கால்கள் அவசரமாகத் தேவைப்படுகின்றன என்றும், பழுதடைந்துள்ளவற்றைத் திருத்துவதற்குத் தேவையான மூலப்பொருள்களைக்கூட இங்குஅனுப்பக் கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி மறுத்துவிட்டது எனவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

மேற்படி நிறுவனம் 1987 இல் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இன்றுவரை 629 பேருக்கே செயற்கைக்கால்களைப் பொருத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

விடுதலைப்புலிகள்

# கலை பண்பாட்டுக் கழகம் விருதினை வரவேற்கிறது

(நமது நிருபர்)

அகில இலங்கை கம்பன் கழகம் தமிழீழ இசைக் கலைஞர்களுக்கு ஆண்டு தோறும் 'இசைப் பேரறிஞர்' விருது வழங்கி கௌரவிக்க உள்ளது.

இந்த இசைப் பேரறிஞர்களுக்கு விருது வழங்கி கௌரவிப்பதையிட்டு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளது.

இவ்வருடம் இவ் விருதை நாதஸ்வர மேதை திரு எம். பஞ்சாபிகேசனுக்கு வழங்குவது பொருத்தமானதே எனவும் தமிழீழத்தை தன் இசை வல்லமையால் தலை நிமிரச் செய்த பெருந்தகை எனவும் விருது பெறும் கலைஞருக்கும் அதை வழங்கிக் கௌரவிக்கும் கம்பன் கழகத்துக்கும் எமது வாழ்த்துக்கள் என இது தொடர்பாகக் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் புதுவை இரத்தினதுரை வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவித்துள்ளார்.

**நிதர்சனம் நடாத்தும்**
**சிறுகதை எழுத்தாளர்களுக்கான**
**பயிற்சிப்பட்டறை**

ஆரம்ப, புதிய சிறுகதை எழுத்தாளர்களுக்கான பயிற்சிப் பட்டறை ஒன்றை நடாத்துவதற்கு நாம் தீர்மானித்துள்ளோம். தமிழீழத்தின் புகழ்பூத்த சிறுகதை எழுத்தாளர்கள் இப்பயிற்சிப் பட்டறையை நடாத்துவதற்கு முன்வந்துள்ளனர். பயிற்சி வகுப்பு 1992-01-17 (வெள்ளிக்கிழமை) மாலை 3 மணிக்கு நிதர்சனம் செயலகத்தின் அமலன் அரங்கில் ஆரம்பமாகும்.

இப்பயிற்சிப் பட்டறையில் கலந்து கொள்ளவிரும்புவோர் தமது பெயர்களை 1992-01-16 க்குமுன்பாக நிதர்சனம் செயலகத்தில் பதிவு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

"நிதர்சனம்"
தீப் வீதி, திருநெல்வேலி
யாழ்ப்பாணம். தமிழீழம்

(சி/3736)

# நினைவு கூருகின்றோம்

**1992-01-10**

1974 ஆம் ஆண்டு இதே தினத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டின்போது கொல்லப்பட்ட 13 அப்பாவிப் பொது மக்கள்.

1986 ஆம் ஆண்டு தொண்டமானாறில் எறிகணைத் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமகன்.

1991 ஆம் ஆண்டு நெடுந்தீவில் சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட பீரங்கித் தாக்குதலில் வீரச்சாவெய்திய

**கப்டன் மெடிசின் மாஸ்ரர்** (யோகநாதன் பிரதாபனன் - 2 ஆம் குறுக்குத்தெரு, பருத்தித்துறை)

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

**விடுதலைப் புலிகள்**
**மக்கள் முன்னணி**

(சி-3753)




தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் இன்று ஒன்றுக்கு மேற்பட்ட மாவீரர்களைக் கொண்ட குடும்பங்கள் என்று பெரிய பட்டியலே உண்டு. வல்வெட்டித்துறையில் கப்டன் வாசு, மேஜர் ஜேம்ஸ் கப்டன் சுந்தரி, பருத்தித்துறையில் கப்டன் ரஞ்சன், மேஜர் தண்டேஸ் அச்சுவேலியில் மேஜர் அல்பேட், லெப். பவான், வவுனியாவில் 2 ஆம் லெப். அசோக், மேஜர் குமுதன், காரைதீவில் சுந்தர், கப்டன் குரூஸ் மற்றும் நாதன், குரு, இணுவிலில் ராஜ், கப்டன் வரதப்பா ..... இப்படியான ஒரு நீண்ட பட்டியலில் இடம் பெறுபவர்கள் தான் 2 ஆம் லெப். டெஸ்மனும், கப்டன் மைக்கலும்.

இவர்கள் போராளிகளானது காலத்தின் கட்டாயம். ஏனெனில் இவர்கள் திருமலை மண்ணில் பிறந்தவர்கள். இந்த மண்ணில் பிறந்துள்ள ஒவ்வொரு குழந்தையுமே போராட்டத்தின் தேவைபற்றி அறியும். இங்கு பிறந்த ஒவ்வொரு தமிழ்மகனும் சிங்களப் பேரினவாதிகளால், எங்கிருந்தோ வந்தவர்களால் தமக்கு நெருங்கிய ஒருவரையாவது இழந்துள்ளனர். இந்த வரலாற்றுக் கட்டாயத்தில் தான் வேலையாவின் நான்கு பிள்ளைகளில் மூவர் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டனர். இவர்கள் எல்லோருமே கல்வியில் சிறந்து விளங்கியவர்கள் தான். உயர் கல்விக்கான வாய்ப்புக்கிடைத்தவர்கள் தான். ஆனாலும் மூவரையுமே தேசபற்று ஆட்கொண்டிருந்தது. ஆகவே தமக்காக வாழும் வாழ்க்கை வாழ இவர்கள் மனம் ஒப்பவில்லை.

இவர்களில் மிக அபாயகரமான சூழ்நிலைக்குள் வாழ்ந்தவன் டெஸ்மன். யாழ்.குடாநாட்டிற்குள் நான்கு இலக்கத்துக்குள் இருந்த போராளிகளின் எண்ணிக்கை மூன்று இலக்கமாகி பின்னர் இரட்டை இலக்கமாகி அதுவும் நாளாந்தம் உதிர்ந்து கொண்டிருந்த காலகட்டத்தில் சிரித்தபடியே உலாவியவன். ''நாளைக்கு எங்களில் ஆர் இருக்கிறமோ தெரியாது. மிச்சம் இருக்கிற ஆக்கள் இதைச்செய்யுங்கோ'' என்று கடமைகளைப் பட்டியலிட்டவர்களுள் ஒருவன். வீதியில் இறங்கினால் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பர் இந்திய இராணுவத்தினர். பல்கலைக்கழகம் செல்லத் தகுதியுடைய இவன் பல்கலைக்கழக மாணவனாக வேடம் பூண வேண்டிய நிலைமை. அவ்வாறே தனது கடமைகளை மேற்கொண்டான். உளவு பார்ப்பதில் இவன் மிகத் திறமையானவன். 'எங்கு பலம் உண்டோ அங்குதான் பலவீனமும் இருக்கும்'' என்பதை அனுபவ பூர்வமாக உணர்ந்து கொண்டவன். அந்தப் பலவீனம் எங்கு உள்ளது என்பதைக் கண்டுபிடிப்பது தான் இவனது வேலை. அதை ஒழுங்காகவே மேற்கொண்டான். அதனால் அடிக்கடி சிப்பாய்களின் வீட்டிற்குச் சீருடைகளை அனுப்பிக் கொண்டிருந்தனர் இந்திய இராணுவத்தினர்.

காலையில் புறப்பட்டால் இரவில் தான் தனது நண்பர்களை மீண்டும் சந்திப்பான் இவன். வீதிகளில் இந்திய இராணுவத்தினர் அலைந்து கொண்டிருப்பர். இவனோ திருத்த வேண்டிய துப்பாக்கிகளை திருத்துவதிலோ, அடுத்த நாள் தாக்குதலுக்கான இடத்தைத் தீர்மானிப்பதிலோ ஈடுபட்டுக் கொண்டிருப்பான். தொடர்ந்தாற்போல ஒரு இடத்தில் தங்க முடியாது. ஆனாலும் இவனுக்கு அந்த வாழ்க்கை பிடித்திருந்தது. அதில் மனநிறைவு இருந்தது.

பச்சைச் சட்டைகளால் நிறைந்திருந்த யாழ். நகரப் பகுதிக்குள் மாகாணசபைத் தேர்தலைப் பகிஷ்கரிக்கக் கோரும் ஒலிப்பதிவு நாடாவை இன்னும் சிலருடன் சேர்ந்து ஒலிக்க வைத்தவன். இவ்வாறு இந்திய இராணுவத்தின் கண்ணுக்குள் விரலை விட்டு ஆட்டிக்கொண்டிருந்த இவனைப் பற்றி அவனோடு கூட இருந்த ஒரு போராளி குறிப்பிடுகையில் 'ஒரு நாளாவது இவன் தன்ரை குடும்பத்தைப் பற்றியோ, தன்னுடைய ஒரு அண்ணன் இயக்கத்தில் இருக்கிறதைப் பற்றியோ கதைச்சதில்லை. எவ்வளவு ஆபத்து வந்தாலும் பதறமாட்டான். எந்த நேரமும் சண்டை வரும். நாங்களும் ஓடவேண்டி வரும். ஓடிமுடிய போய்ச் சேர்ந்ததும் சிரிப்பும. சாவு எண்டைக்குமே பயங்காட்டியதில்லை இவனுக்கு. ஆயுதங்கள் திருத்திறதில கெட்டிக்காரனெண்டபடியால் இந்தப் பொறுப்பு இவனுக்குத்தான்'' என்று கூறினார்.


கப்டன் மைக்கல்

மிகத் தந்திரமாகச் செயற்பட்டு வந்தாலும் இவனையும் துரோகிகள் இனங்கண்டு கொண்டனர். 14 - 05 - 89 அன்று எதிரியிடம் இவன் இனங்காட்டப்பட்டான். திருநெல்வேலியில் மாணவன் போன்ற தோற்றத்தில் வந்த இவனை இந்தி(ய)ப் படை வழிமறித்தது. தப்பமுடியாத நிலையில் சயனைட் உட்கொண்டான். உயிர்போகும் வரை இவனது போர்க்குணம் ஓயவில்லை; தனது பலங்கொண்ட வரை அவர்களைத் தாக்கினான். சயனைட் உட்கொண்ட வாயால் இந்தியப் படை அதிகாரி ஒருவரைக் கடித்தான். இறுதியில் மூச்சடங்கினான்.

இந்தியப்படை எமது மண்ணை ஆக்கிரமித்தால் என்னென்ன நடக்கும் என்று ஒரு தேசபக்தரான ஒரு கல்விமானுடன் திலீபன் பேசிக்கொண்டிருந்தபோது ஒரு கட்டத்தில் அப்படியாயின் என்னிடம் ஆயுதம் இல்லாது போனாலும் எனது பற்களாலும் நகங்களினாலும் போராடுவேன்'' எனக் குறிப்பிட்டான். அதை டெஸ்மன் நிதர்சனமாக்கியுள்ளான்.

இவனது சகோதரன் மைக்கல் பத்தாம்தரம் பரீட்சையில் தோற்றி மிகத் திறமையாகச் சித்தியடைந்திருந்த வேளை (7D 1C) இந்தியப் படைகளினதும் தேசத்துரோகிகளினதும் அடாவடித்தனங்கள் உச்சக் கட்டத்தையடைந்திருந்தன.

இவர்களின் புலிவேட்டை ஒருபுறம் நடக்க ஒருபுறம் மைக்கல் இவர்களுக்கெதிராக சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்தான். ஒரு நாள் வீட்டிற்குள் புகுந்த இந்திய இராணுவமும் ஈ.பி.ஆர்.எல். எவ். வினரும் இவனைச் சித்திரவதை செய்து நாக்கால் அதனை உரிக்கும்படி கட்டளையிட்டனர். இவன் சித்திரவதை செய்யப்படுவதைக் கண்ட தாயின் கண்ணில் இருந்து கண்ணீர் ஆறாகப் பெருகியது. அதில் மொத்தத் தமிழினத்தையே கண்டான் இவன். அதனால் பகைவாளி ஏந்திய இவனது கரங்கள் ஆயுதத்தை ஏந்த முடிவு செய்தன. இவன் காட்டு வாழ்க்கைக்குத் தயாரானான். திருமலை மண்ணில் பல களங்கள் கண்டான்.

அதன்பின் இவனது போர்க்களங்கள் பெரும்பாலும் மணலாற்றுப் பகுதியாகவே இருந்தன. வெலிஓயா. முந்திரிகைக்குளம் காளம்பைக்குளம் என்று பலபகுதிகளிலும் இவனது துப்பாக்கிக்கு பகைவர்கள் இரையாகினர். மாங்குளமுகாம் தகர்ப்பு, சிலாவத்துறை முகாம் மீதான தாக்குதல், ஆனையிறவு முகாம் மீதான தாக்குதல் புல்லாவெளியில் நடைபெற்ற மோதல் என்பனவற்றில்இவன் தனது முத்திரையைப்பதித்துக் கொண்டான்.

இறுதியில் இவனுக்குப் போரில் கூடிய அளவு சந்தர்ப்பத்தைக் கொடுத்த மணலாற்றுப் பகுதியில் நடைபெற்ற சிங்களப் படையெடுப்பை முறியடிக்கும் முயற்சியில் காயமடைந்தான். யாழ்.வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் போது இவன் எம்மைப் பிரிந்தான்.

எல்லையில் எழுந்து நின்ற இவனது துப்பாக்கி இல்லை இனி அடிமைத்தனம்என ஓங்கி ஒலிக்கிறது! எல்லையைக் காக்கத் தவறியதால் தான் சிங்களக் குடியேற்றத்தை தடுக்கத் தவறியதால் தான் இன்று திருமலை மாவட்டத்தில் விஜேபுர' மொறவேவா போன்ற பெயர்கள் ஒலிக்கின்றன. அவற்றை மீண்டும் பாலம் போட்டாறு என்றும் முதலிக்குளம் என்றும்அழைக்கும்நாள் வரும். எல்லையைநோக்கி நகரும் போராட்டம் இதைத் தான் உணர்த்துகிறது.

மணலாறு
--இளமாறன்

# ஓசோன் - நஞ்சு ஆனால் கவசம்

சூரியனில் இருந்து வரும் புற ஊதா (*Ultra Violet*) கதிர்களின் பாதி - பிலிருந்து உயிரினங்களைப் பாதுகாப்பது ஓசோன் எனும் வாயுவாகும். இது பூமியைமூடி ஒருகவசமாக உள்ளது. அண்மைக் காலங்களில் இந்த ஓசோன் கவசத்திற்கு ஏற்படும் பாதிப்புப் பற்றி, பெருமளவில் பேசப்படுகிறது. சூழலியல் விஞ்ஞானிகள் இது பற்றி பெருமளவில் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். வழமைபோல், இந்தப் பாதிப்பையும் ஏற்படுத்துவது மனிதனே.

நாம் சுவாசிக்கும் ஒட்சிசன் வாயு இரண்டு ஒட்சிசன் அணுக்களைக் கொண்டது. மூன்று ஒட்சிசன் அணுக்களைக் கொண்ட வாயுவே ஓசோன் என அழைக்கப்படுகிறது. வழமையாக ஓசோன் வாயு நாம் சுவாசிக்கும் காற்றில் காணப்படுவதில்லை பூமியின் மேற்பரப்பிலிருந்து 13-25கி.மீ.உயரத்திலேயே இது காணப்படுகிறது. ஓசோன் நாம் சுவாசிக்கும் காற்றில் ஒரு பில்லியனில் 500 பங்கு காணப்பட்டு, அதனை ஒரு மணிநேரம் சுவாசிப்போமாயின் சுவாசத்தடை ஏற்படும்; கண் எரிச்சல் ஏற்படும். இதனிலும் கூடிய செறிவில் காணப்படுமாயின் நஞ்சாகி உயிரிழப்பை ஏற்படுத்தும்.

ஆனால் நஞ்சாக இருப்பது தான் கவசமாகவும் இருக்கிறது இக்கவசம் இல்லாவிடின் சூரியனிலிருந்து வரும் புற ஊதா கதிர்களினால் புற்றுநோய் முதலிய பாதிப்புக்கள் ஏற்படும்.

சூரியனில் இருந்து வரும் புற ஊதா கதிர்கள் ஒட்சிசன் வாயுவை இரண்டு ஒட்சிசன் அணுக்களாகபிளக்கிறது இந்த அணுக்கள் வேறோர் ஒட்சிசன் மூலக்கூறுடன் சேர்ந்து ஓசோனாக மாற்றமடைகிறது. இது இயற்கையாக நடைபெற்று ஓசோன்கவசம் உண்டாகிறது.

நிலையற்ற ஓசோன் வாயு மீண்டும் ஒட்சிசனாக மாற்றம் அடையும். ஆனால் இயற்கையில் ஓசோன் உற்பத்தியும் அழிவும் ஓர்சமநிலையில் இருக்கும்.

இந்தக் கவசத்திற்குத்தான் பெருமளவு பாதிப்பு இப்பொழுது ஏற்பட்டுள்ளது. இதற்கு பெருமளவு காரணமான இரசாயனம் குளோரோபுளோரோ காபன்கள் (CFCs) ஆகும். இதிலுள்ள குளோரீன் ஓசோன் படலத்தை தாக்கி சேதப்படுத்துகிறது. இந்த இரசாயனம் குளிர் சாதனங்களில் குளிர்விக்கும் ஒரு பொருளாக பெருமளவில் பயன்படுத்தப் படுகிறது. அத்துடன் வாசனைப் பொருள்கள், இலத்திரனியல் கருவிகளை சுத்தம் செய்யும் திரவங்கள் என்பவற்றிலும் காணப்படுகிறது. இவற்றின் பாவனைகள் அதிகரித்து வருவதால் இந்தஇரசாயனங்களின் தயாரிப்பும் அதிகரித்து வருகிறது. பழுதடைந்த குளிர் சாதனங்கள் வீசப்படும் போது அவற்றில் மீதமிருக்கும் இந்த இரசாயனங்கள் கசிந்து வளிமண்டலத்தையடைந்து ஓசோன் கவசத்தில் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

பூமத்திய கோட்டுக்கு வடக்கேயும் தெற்கேயும் உள்ள பகுதிகளில் இப்பாதிப்பு அதிகமாக காணப்படுகிறது. மிகமோசமாக அந்தாட்டிக்கா பகுதியில் பாதிப்பு ஏற்பட்டு ஓசோன்கவசம் மிகவேகமாக அழிந்து வருவதாக விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர்.

பூமத்திய கோட்டுக்கு 65 பாகை வடக்கேயும் 65 பாகை தெற்கேயும் 2·5 சதவீதமான

- வேலவன் -

ஓசோன் அழிந்து போய்விட்டது அந்தாட்டிக்கா பகுதிகளில் 1970 களில் இருந்ததை

( 6 ஆம் பக்கம் பார்க்க )

## முத்திரை அளவான வீடியோ கமரா

ஒரு முத்திரையின் அளவான வீடியோ கமரா ஒன்று செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தற்பொழுது கறுப்பு வெள்ளைப் படங்களே எடுக்க முடியும். வர்ணப்படங்கள்எடுப்பதற்கான ஆராய்ச்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.


8மில்லிமீற்றர் சதுர அளவினதாகிய இதனுள்ளே உள்ள சிலிக்கன் நுண்பகுதி (*Silicon Chip*) 100,000 ரான்ஸிஸ்டர்களுக்கு இணையான தொழிற்பாட்டை செய்யக்கூடியது.

## எண்டோஸ் கோபி

உணவுக்குழாய், வயிறு முன்சிறுகுடல், சிறுகுடல் போன்ற உள்ளுறுப்புகளில் வரும் நோய்களை மிகத் துல்லியமாக கண்டறிய புதிய கருவியொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இது புகைப்படக்கருவி பொருத்தப்பட்ட நுண்ணிய உபகரணமாகும். இதன்பெயர் 'எண்டோஸ் கோபி' என்பதாகும்.

சத்திரசிகிச்சை மூலம் கண்டறிய வேண்டிய நோய்களை அது கண்டறிவதோடு சிகிச்சை செய்யவும் உதவுகிறது. நவீன வைத்தியதுறையில் இது ஒரு முக்கிய கண்டுபிடிப்பாக கொள்ளபபடுகிறது.

## சிறுகதை




(1)

பச்சைப்பசேல் எனச் செழித்து வளர்ந்திருந்த புற்களைக் கட்டாக்காலி மாடுகள் மேய்ந்து சுவைத்தன. காலைக் கதிரவனின் தழுவலில் பற்றைக்காடுகள் புழுதி படிந்து தெரிந்தன. காலையில் கமவேலை செய்வதற்காக வந்த விவசாயிகள் வெட்டிகளால் வரம்புக் கரைகளைச் செதுக்கிச் செதுக்கிச் சாய்த்து மண்ணை அதன் மேல் அள்ளிப் போட்டவாறு நின்றனர்.

பெரியதொரு பரப்பை ஊடறுத்தவாறு செம்மண் நிறமான ஒற்றையடிப்பாதை, கிராமத்தின் உச்சி வகிடாகச் சென்றது. அப்பாதையால் பேதுருவும் ரவியும் கண்ணி குத்துவதற்காக வயற்கரையை அண்டிச் சென்றனர். வயற்கரையின் அருகே அட்டைத்தீவு. அதிலிருந்து முந்நூறு யார் தூரத்தில் குருசுக் கோயில். அந்த ஊரின் சமநிலையை உயர்த்திக்காட்டும்ஓர்உயர்ந்த மேடான இடம் அந்தக் குருசுக் கோயில்தான். அது ஒரு பதினைந்து ஏக்கர் பரப்பைக் கொண்ட பழைய நிலப்பரப்பு; பழைய சுண்ணக் கற்களும் சிப்பியின் உடைந்த துகள்களுமே அந்த மேட்டை உருவாக்கியிருந்தன. அதில் சிறிய ஓலைக் கோயில்.

அவர்கள் இருவரும் பலமணி நேரம் காத்திருந்தும், காலை வேலை செய்த வேலையாட்களின் சலனத்தால் வெட்டையில் தங்கி நின்ற பட்சிகள் எல்லாம் மேலை வானை நோக்கிக்கிளம்பின. ஒற்றைப் பனை ஓலையில் அமர்ந்திருந்த செம்பருந்து அவர்களைக் கவனிப்பது போலப்பட்டது.

பெரும் ஏமாற்றத்துடன் அவர்கள் வீடு திரும்பினார்கள். வீட்டில் யாருக்கும் தெரியாது அவர்கள் கண்ணி குத்தச் சென்றது. தெரிந்தால் அப்பா அடித்தே கொன்றிடுவார் எனப் பேதுரு எண்ணமிட்டான். கால்களில் சதுப்பு நிலச்சேறு காய்ந்து போய் இருந்தது. வீட்டுப் படலைக்கு வந்ததும் கால்களை கவனமாக இரு கைகளாலும் தட்டிவிட்டு நல்ல பிள்ளை போல 'அம்மா தேத்தண்ணி இல்லையே?' என்று செல்லங் கொஞ்சியவாறு உள்ளே சென்றான்.

'இந்த விடியற்காலையில எங்கையடா போனனீ? உன்னை எங்க தேடுறது.. போ போய் கேத்தில்ல இருக்கு. ஊத்திக்குடி ' என்றாள் அம்மா. எப்படியோ தப்பிக்கொண்டான்.

எண்டைக்காவது ஒரு நாள் இந்தக் கண்ணியிலே அந்தச் செம்பருந்தைப் பிடிக்காது விடுவதில்லை' என்று திடமான முடிவுசெய்து கொண்டான்.

(2)

கிராமத்தின் செம்மண் பூமியிலே செவ்விந்தியர் கூட்டமென இந்திய இராணுவம் சுற்றிவளைத்து நின்றிருந்தது. இனிய அதிகாலையின் அமைதிச் சூழலை அவர்களின் வருகை குலைத்தது. குருசுக் கோயிலின் முன் அந்தக் கிராமமே பயத்துடனும் கவலையுடனும் வரிசையாக நின்றிருந்தது. அவனின் அப்பா அம்மா, தங்கைமார் அனைவரும் வரிசையில் நடுங்கியவாறு நின்றிருந்தனர்.

'இதிலை புலிகள் இருக்கா?' என்று இராணுவ வீரன் ஒருவன் உறுமினான். அக்குரல் அப்பிரதேசம் எங்கும் எதிரொலித்தது. குருசுக் கோயிலின் கூரையில் அமர்ந்திருந்த புறாக்கள் சிறகுகளைப் படபடவென அடித்து வானில் எழுந்தன.

'பேதுரு இருக்கானா? ரவி இருக்கானா? என்று ஒருவன் யாழ்ப்பாணத் தமிழில் கேட்டான். எல்லார் முகங்களிலும் பலிக்கடாக்களின் துயரம் கவிந்திருந்தது.

அவர்கள் இருவரும் அங்கிருந்தால் தானே?

சிலவற்றைச் சிந்தித்து முடிவெடுக்க வேண்டிய பருவத்தைப் பேதுரு அடைந்து விட்டான் அப்பா ஒரு குடிகாரன். அவருக்கேற்ற விதமாக, அவரைத் திருத்த முடியவில்லை. குடும்பக் கஷ்டம் அவனைப் படிப்பில் சிரத்தை காட்டத் தூண்டவில்லை. அவன் தங்கைமார்களைச் சிந்திக்கும் போது பாசத்தின் வாசனை அழுகையாகத்தான் பிறக்கின்றதென்பதை அறிந்தான். அவனுக்குப் படிக்க ஆசைதான். படித்தான் வீட்டுத் துயரங்களிடையே. ஒரு விதமாகக் க.பொ.த சாதாரண தரம் படித்துக் கொண்டிருந்த போதுதான், இந்திய இராணுவம் அக்கிராமத்துள் பிரவேசித்தது. 'இந்திய இராணுவமே வெளியேறு' என்று கோஷத்துடன் நடாத்தியஊர்வலத்திற்குப் பேதுருவும் ரவியும் முன்னின்ற சங்கதி வெளியில் கசிந்துவிட்டது.

கிராமம் கதறியது; கண்ணீர் விட்டது. அடி, உதை, சித்திரவதைகள் அவன் அப்பா உட்பட எத்தனை பெரியவர்கள் அவர்கள் முன் கையேந்தி நின்றார்கள். எதிர்பார்த்தவர்கள் கிடையாமையால் அப்பாவி மக்கள் தாக்கப்பட்டார்கள். அடித்துச் சிதைத்து அடுத்த வளவில் தூக்கிப் போட்டார்கள். அரையுயிரில் எத்தனை பேர் என்பது அந்த ஆஸ்பத்திரிக்குத்தான் தெரியும்.

'இனியும் பேசாமல் இருப்பதில் பயனில்லை. என்ன கஷ்டம் என்றாலும் இந்தத் துயரத்திற்கு ஒரு முடிவு காணத்தான் வேணும் அவர்களுடன் சேர்ந்து கொள்வோம்' என்றான் பேதுரு. விடத்தல் தீவிலிருந்து அவர்கள் இருவரும் வள்ளத்தில் துடுப்பிட்டுக் தள்ளி வந்தார்கள். ரவி துடுப்பை வலித்தபடி தன் கிராமத்தைப் பார்த்தான்.

எவருடைய குடிசையோ விளாசி எரிவது தெரிகின்றது. தீயவர்கள் அப்பாவி மக்களின் குடிசைகளிற்குத் தீயிடுகிறார்கள். விழிகளில் நீர் சுரக்க மனதில் வைராக்கியம் ஏறியது.

'இவர்கள் ஒரு நாள் இதற்குப்பதில் சொல்லித்தான் ஆக வேண்டும்' என்றான் ரவி.

அவர்களின் வள்ளம் இலுப்பைக்கடவையை வந்தடைந்த போது கடற்கரையில் ஆயுதங்களுடன் அவர்கள் நண்பர்கள் நின்றிருந்தார்கள்.

(3)

பாடசாலை வகுப்பறையில் ரவி கேட்டான்.

'என்ன மச்சான் இண்டைக்கும் எம்புடேல'

'பொறடா ..பொறடா எப்பிடியும் அதைப் பிடிக்காமல் விடுறதில்லை ' என்றான் பேதுரு திடமாக.

'அம்பிட்டார் ' என்று அவர்கள் கோஷமிட்டனர்.

'அப்படியே இருந்து ஓலமிடட்டும். அப்பதான் மற்றவை வரமாட்டினம்...' என்றான் ரவி:

இருட்டி விட்டது.

வீட்டிற்கு அவர்கள் ஓடிவந்தார்கள். வழியில் நித்தி அண்ணை எதிர்ப்பட்டார்.

'டேய் பேதுரு உன்னை உன் கொப்பர் ஊரெல்லாம் தேடுறார் இப்ப வீட்டில திருக்கவாலும் கையுமாக நிக்கிறார். போ... இண்டைக்கு நல்ல பூசைதான்'

அவனுக்குப் பயத்தில் உடல் நடுங்கியது.

படலையைத் திறந்தான்.

'ஆர் அப்பன் அது?' என்று அப்பா குரல் தந்தார். மெதுவாக அவனுக்குக் குலப்பன் அடிக்கு மாப்போல் இருந்தது.

'வா, ராசா, வா .. இப்பதான் உனக்குப் பொழுது பட்டுதோ?' என்றார்; எழுந்தார் வலக்கரத்தில் நார்த்தடி.

சடார் சடார்...

'அம்மா ' என அவன் அலறித்துடித்தான். அவன் முதுகு றயில் தண்டவாளம் மாதிரியாகிவிட்டது. வரி... வரியாக தளும்புகள். அம்மா ஓடிவந்து தடுத்திருக்காவிடில் இன்னமும் கிடைத்திருக்கும். அடி வேதனையில் சாப்பிடக்கூட இயலாது போய் அழுது கொண்டு மண்ணைத் துணியால் தட்டிவிட்டு மண்கொட்டிலின் குந்தில் குப்புறப்படுத்துக்கொண்டான்.

(4)

தூரத்தில் எதிரியின் டிறக் வண்டி ஒன்று வயல்களுக்கிடையே உறுமலுடன் வருவது தெரிந்தது. ஒளி வெள்ளத்தைப் பாய்ச்சியபடி அது விரைந்து வந்தது. வீதியைத் தவிர்த்து, குருசுக் கோயிலின் பின்புற மேட்டுப் பக்கமாக அது திரும்பியது. ஏற்கனவே அவ்விடத்தில் கண்ணி புதைக்கப்பட்டிருந்தது.

ரவி தன் வாக்கிடோக்கியில் அறிவித்தான். 'எல்லாம் சரி மச்சான் வருகினம். எந்த இடத்தில் தெரியுமே? நாம் முந்திக் கண்ணி குத்திப்பருந்து பிடித்தோமே அந்த இடத்தில் தான்!...'

பேதுரு மகிழ்வுடன் மெதுவாகச் சிரித்தான். இரத்தக் கறை படிந்திருந்த அவனது சீருடையுடன் மற்றும் சில கருவிகளுடன் மற்றைய தோழர்களை எதிர்பார்த்துக் காத்திருந்தான்.

'டிறக்' நெருங்கி வந்து கொண்டிருந்தது. பருந்து கண்ணியில் அகப்படப் போகிறது. இதற்காக அவனிற்கு வீட்டில் அடி கிடைக்கப்போவதில்லை பாராட்டுத்தான் கிடைக்கும்.

"மைக்கல்"

## அகங்களும் முகங்களும்

இடிந்து கிடந்த நினைவுத் தூண்களை
எழுப்பி வைத்தீர்
இடித்தவரை நினைவூட்ட

எழுபத்தியேழு ஓகஸ்டில் தெற்கில்
இழந்த உயிர்களுக்கு
நினைவுத் தூண்கள் நிறுவுவீரா?
உங்கள்
இழிமைகளை நினைவூட்ட?

மலர் வளையங்கள், மாலைகள் சாத்தல்
இவை உதவப் போவ தில்லை,
எங்கள் நினைவுகளில் உங்களைச் செதுக்க
மலர் வளையங்களும் மாலைகளும்
உதிர்ந்து விழும் உங்கள்
சொல்லலங்காரங்கள் போல.

மாலைசாத்திய கைகள்
மறுநாளே வாளெடுக்கும்
நிகழ்ச்சிகள் பல
நடப்பிலே கண்டோம்.

மலர் தூவிய கைகளாலேயே
துட்டகெமுனுவின் அஸ்தியும் தூவுவீர்
வகுப்பு வாத மேகங்கள் இருண்டு
குருதி மழை பொழிய.

இரத்தச் சுவடுகள் பதிய
ஒளிந்தோடி ஓர்மூலையில் பதுங்கி
உடை மாற்றி வந்து
ஒப்புக்கழுவீர்.

உடை மாற்றலேன்?
உங்களை மாற்றுங்கள்

இனவாத மணம் அறாத வாயால்
இன்னமுத மொழிகள்
"இதயத்தை உங்களிடமே விட்டுவிட்டுச்
செல்கின்றேன்'' இப்படிப் பலப்பல.

எடுத்துச் செல்லுங்கள்
உங்களிதயத்தை உங்களுடனேயே
எங்கள் நினைவுகளில் உங்களைச் செதுக்குமுன்
உங்கள் இதயத்தைச் செதுக்குங்கள்.

காலங்காலமாய் இரத்தக் கறை படிந்து
துருப்பிடித்த இதயத்தை
துருவி ஆராயுங்கள்.
போலித் தார்மீகப் போர்வை களைந்து
உண்மை நிர்வாணம் பற்றுங்கள்.

பஞ்சள் அங்கிகளுக்கும்
மழித்த தலைகளுக்கும்
புலப்படாது புதைக்கப்பட்டு விட்ட
புத்தரின் அன்பு துலங்கும் வரை
செதுக்குங்கள்! உங்கள் இதயத்தைச்
செதுக்குங்கள்!

எடுத்துச் செல்லுங்கள்
எங்கள் உபதேசமிதே

- சு. வில்வரத்தினம்

குறிப்பு: 1974 ஆம் ஆண்டு இதே தினத்தில் இடம்பெற்ற தமிழாராய்ச்சி மாநாட்டுப் படுகொலையை நினைவுகூருமுகமாக சு. வில்வரத்தினத்தின் '' அகங்களும் முகங்களும் '' என்ற கவிதைத் தொகுப்பு நூலிலிருந்து இக்கவிதை பிரசுரமாகிறது.

## புதிய நதி

10 - 14 மில்லியன் டாலர் செலவில் லிபியாவில் ஒரு செயற்கை நதி உருவாக்கப்பட உள்ளது இத்திட்டம் 3 கட்டங்களில் பூர்த்தி செய்யப்படும் தினமும் 6 18 மில்லியன் கனலீற்றர் நீர் 4500 கிலோ மீற்றர் நீளமான குழாய் வழியாக செல்லும்.

லிபியப் பாலைவனத்தின் தென்பகுதியிலுள்ள பகுதியில் தோண்டப்பட்டுள்ள 270 கிணறுகளில இருந்து இந்த நீர் கொண்டு செல்லப்படுகிறது. இக்கிணறுகளுக்கு எகிப்திலுள்ள நைல் நதியின் நீர் ஊறிவருவதாக கூறப்படுகிறது.

இதற்குப் பாவிக்கப்பட்ட 250 000 குழாய்களை செய்த கொங்கிறீற் மூலம் 6000 கி மீ. நீளமான பெருந்தெருவை நிர்மாணிக்கலாம். இவ்வேலையின் போது 200 மில்லியன் கனமீற்றர் மண் அகழ்ந்தெடுக்கப்பட்டது

# ஆஸ்த்மா

### ஆஸ்த்மா ஏன் ஏற்படுகிறது?

''ஆஸ்த்மா'' என்கிற நொய்வு வியாதி உள்ளவர்களுக்கு மழைகாலமும் பனிக் குளிரும் கொஞ்சம் நெருக்கடியான காலம் தான். ஒருவருக்கு ஆஸ்த்மா நோய் ஏன் ஏற்படுகின்றது என்பதற்கான அடிப்படைக் காரணம் இன்னும் உறுதியாக கண்டு பிடிக்கப்படாவிட்டாலும், இரண்டு காரணிகளுக்கு விஞ்ஞான பூர்வமான விளக்கம் மருத்துவத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது ஒன்று இது ஒரு பரம்பரை வியாதியாகும். அதாவது தாய்க்கு அல்லது தகப்பனுக்கு இவ் வியாதி இருந்தால் இவர்களுக்கு பிறக்கும் குழந்தைகளுக்கு ஆஸ்த்மா நோய் ஏற்படும் ஆபத்து இருக்கிறது. இரண்டாவதாக ஆஸ்த்மாவை தூண்டும் சில காரணிகள் உள்ளன. உதாரணமாக தூசி, பனிக் குளிர், குளிர் காற்று அலர்ஜியை ஏற்படுத்தும் சில உணவுப் பொருட்கள். உதாரணமாக இறால் கணவாய், மீன், கத்தரிக்காய், வெண்டிக்காய் இன்னும் சிலருக்கு பசுப்பால், தக்காளி என்பனவும் ஆஸ்த்மாவைத் தூண்டும். எந்த உணவை உண்டால் தமக்கு 'ஆஸ்த்மா' உடன்வரும் என்பதை ஆஸ்த்மா உள்ள பலர் தமது சொந்த அனுபவத்தில் அறிந்திருப்பார்கள். இவர்கள் தொடர்ந்தும் இவ்வுணவுகளை தவிர்ப்பது நல்லது.

### ஆஸ்த்மா என்றால் என்ன?

பரம்பரையில் ஆஸ்த்மா உள்ள குழந்தைகளுக்கு அவர்களின் பாதுகாப்புக் கலங்களில் சில பிழைகள் இருப்பதால் முன்பு கூறிய காரணிகள் சுவாசத்துடனோ அல்லது உணவுடனோ உடலினுள் உட்செல்லும் போது வழமையைவிட அவர்களுடைய சுவாசப்பையில் சில இரசாயனப்பதார்த்தங்கள் அதிகளவிலும் சில நரம்புகளின் மேலதிக தூண்டுதல்களும் சேர்ந்து சுவாசப்பையிலுள்ள சிறு குழாய்களை சுருங்கவும், குழாய்களுக்குள் அதிகளவு சீதத்தைச் சுரக்கவும், கலங்களை வீங்கவும் செய்கிறது. இதனால் சுவாசக்காற்று சுவாசப்பையின் அடித்தளத்தை அடையமுடியாமல் சுவாசம் தடைப்படுகிறது இதனால் நொய்வு ஏற்படுகிறது. மூச்சு எடுக்க மிகவும் அவஸ்தைப் படுவார்கள்.

### ஆஸ்த்மாவின் ஆரம்பம்

குழந்தைப்பருவத்தில் சுவாசத்தொகுதியில் ஏற்படக் கூடிய நீண்டகாலவியாதி ஆஸ்த்மாவாகத்தான் இருக்கின்றது. 80சத வீதமான குழந்தைகளுக்கு அவர்களுக்கு ஏழுவயதாக முன்னதாக வ ஆஸ்த்மா ஏற்படுகிறதாம். அதிலும் முதல் இரண்டு வயதாகு முன்னர் 40சத வீதமான குழந்தைகள் பாதிக்கப்படுகின்றனவாம். ஆனாலும் இவர்கள் வாலிபபருவத்தை அடையமுற்படும்போது 50சதவீதமானவர்களுக்கு இவ்வியாதி இல்லாமலேயே போய்விடுகிறதாம். 20 சதவீதமானவர்களுக்கே தொடர்ந்தும் ஆஸ்த்மா ஏற்படும் ஆபத்து இருக்கிறதாம். வயதானவர்களில் பெண்களை விட ஆண்களுக்கே ஆஸ்த்மா ஏற்படும் ஆபத்து சற்று அதிகளவில் காணப்படுகிறது.

### ஆஸ்த்மாவின் கடுமையைக் குறைப்பதற்கு சில வழி முறைகள்

ஆஸ்த்மாவைத் தூண்டும் சில காரணிகள் பற்றி முன்பு குறிப்பிடப்பட்டுள்ளது. பரம்பரையில் ஆஸ்த்மா' வியாதி உள்ளவர்களும் சிறுபராயத்தில் குழந்தைகளாக இருக்கும் போது 'ஆஸ்த்மா' ஏற்பட்டவர்களும் முடியுமானளவுக்கு உணவுப் பொருள்களை அதாவது, கத்தரிக்காய், இறால், கணவாய், வெண்டிக்காய் போன்றவற்றை உண்பதைத் தவிர்க்கவேண்டும். குளிர் காலத்தில் மழையில் எவ்வளவுக்கு வெளியில் செல்லா திருக்க முடியுமோ அவ்வளவுக்கு நல்லது. உடற்பயிற்சி செய்பவர்களும் வேறுவேலைகளில் ஈடுபடுபவர்களும் குளிர் காற்றில் தம்மை வெளிக்காட்டுவதைத் தவிர்க்கவேண்டும். இப்படியானவர்களுக்கு சில மருந்து வகைகளும் அலர்ஜியைக்' கொடுக்கும். உதாரணமாக பென்சிலின் (PENCIL-LIN) 'அஸ்பிரின்' என்பன. எனவே இப்படியானவர்கள், வேறு வியாதிக்காக மருத்துவமனைக்குச் செல்லும் போது, தமக்கு 'ஆஸ்த்மா' இருக்கிறதென்பதை வைத்தியரிடமும் தாதிகளிடமும் முன் கூட்டியே சொல்லவேண்டும். 'ஆஸ்த்மா' உள்ளவர்களுக்கு சத்திர சிகிச்சை அளிப்பதும் கடினமாக இருக்கும். தமது இஷ்டத்துக்கு பென்சிலின் எடுக்கக்கூடாது.

ஏனெனில் மற்றவர்களுக்குக் கொடுக்கப்படுவது போல் இலகுவாக முழுமயக்க மருந்து (GENERAL ANAESTHESIA) கொடுக்க முடியாது. எனவே இவர்கள் யாராவது திடீரென காயப்பட்டாலோ அல்லது வேறு காரணங்களுக்காகவோ சத்திரசிகிச்சைக்குட் படுத்தப் படும்போது தமக்கு 'ஆஸ்த்மா' நோய் இருப்பதை முன் கூட்டியே அறிவுறுத்தவேண்டும். இல்லாவிடில் உயிராபத்துக் கூட ஏற்படும்.

### 'ஆஸ்த்மா' ஏற்பட்டால் என்ன செய்வது?

'வென்டோலின்' (VENTOLIN) என்கின்ற மருந்துதான் பெரும்பாலும் பாவிக்கப்படுகிறது. மேலும் 'ஆஸ்த்மா' எப்போதும், சுவாசப்பையில் சளி ஏற்படும் போதுதான் ஏற்படுகிறது. எனவே அதற்கும் சேர்த்துத்தான் மருந்து (ANTIBIOTIC) எடுக்கப்படல் வேண்டும். எனவே ஆஸ்த்மா உள்ளவர்கள் தமக்கு தும்மல், இருமல் ஏற்படும்போதே வைத்தியரை பார்த்து ஆலோசனை பெறுவது நல்லது இன்றைய சூழ்நிலையில் பல முக்கியமான மருந்துவகைகளுக்கு அடிக்கடி தட்டுப்பாடு நிலவுவதால் ஆஸ்த்மா ஏற்பட்டு கடுமையாக்கும் வரை காத்திராது ஆரம்பத்திலேயே மருத்துவ ஆலோசனையை பெற்றுக் கொண்டால் நோயின் கடுமையையும் அதனால், சிலவேளைகளில் அனாவசியமாக ஏற்படும் உயிரிழப்புகளையும் தவிர்த்துக் கொள்ளலாம். ஆஸ்த்மா கடுமையாக்கினால் மருத்துவமனையிலேயே வைத்துப் பராமரிக்கப்படல் வேண்டும்.

இன்றைய சூழ்நிலையில் மின்சாரவசதி இன்மை போக்குவரத்து வசதியின்மை போன்ற அடிப்படைப் பிரச்சினைகள் இருப்பதால், நோய் கடுமையாக்க முன்னரேயே மருத்துவ ஆலோசனை பெறுவது நல்லது. ஆஸ்த்மா வருபவர்கள் 'வென்டோலின்' போன்ற மருந்துகளை, மழைகாலத்தில் சற்று மேலதிகமாகவே வீடுகளில் வைத்திருப்பது நல்லது.

## மருத்துவம்

## நோயாளர்களுக்கு சில அறிவுரைகள்

மாறன்

---

# வானதியின் கவிதைகள்

அந்நாளில் படைமுகத்தில் குனில் கொண்டு முரசறைந்து போர்ப்பாட்டுபாடிக்கொண்டு உடன் செல்லும் பாணனின் பாட்டினால் உணர்வுற்று உந்தி முன்னேறும் மறவீரர்கள் போன்றே வானதியின் பாடல்களைப் பாடிக் கொண்டோ மனதில் நினைத்துக் கொண்டோ முன்னேறும் வேங்கை வீரர்கள் பலர் அவர்களுக்கு உந்து சக்தியையும் நெஞ்சில் அஞ்சாமையையும் வீரத்தையும் வழங்கி மாசற்ற தலைவனின் வழியில் நிற்க ஒரு காரணமாய் அமைந்ததும் வானதியின் பாடல்கள்

மலைகளையும், கடல்களையும் காடுகளையும் மானையும் மயிலையும் பாடாது பாசறைகளில் தேங்கி நிறைந்த வீரம், அவலம், இன்பம், உறுதி ஆகிய மெய்ப்பாடுகளைப் பாடி தன்னையும் தன்னைச் சேர்ந்தவர்களையும் எல்லோரையும் ஒன்றுபடுத்திய தன்மை இவரது பாடல்களுக்கு உண்டு. குண்டுகளுக்கும் துப்பாக்கிச் சன்னங்களுக்குமிடையே நுழைத்து மறப்போர் புரியும் இளைஞர்களுக்கு உணர்ச்சி தரும் யதார்த்த கவிதைகளின் வரிசையில் வானதியின் கவிதைகளும் சேரும்.

தலைவன் மேல் ஏற்பட்ட பற்றும் பாசமும் அவனால் ஊட்டி வளர்க்கப்பட்ட வீரமும் அவர் காட்டிய பரிவும் வானதியை கவிஞராக மட்டுமல்ல சிறந்த வீராங்கனையாவும் ஆக்கியுள்ளது என்பதை அவரது இக்கவிதை தொகுதியிற் பல இடங்களில் காணலாம்.

வாலாற்றை வழிகாட்டியாக வரித்துக்கொண்டவன்- இன்று ஓர் வரலாற்றுக்கே வழியாகி விட்டான். அச்சத்துக்கு கூட இவனிடம் அச்சம் அதனால் (அது) இவனை அண்டியதே இல்லை.

என்பன போன்ற வரிகளிலுள்ள எதார்த்தங்களை புரிந்து கொள்ளுதல் யாவருக்கும் எளிதே.

இவை போலவே 'இல்வாழ்க்கை இன்று இல்லாதவர்களுக்கு இல்லை'' என்ற வரிகளும் இலட்சியப்பசி இவளுக்கு இருந்ததால் சீரணிக்க முடியாத உணர்வுகளைக் கூட சீரணிக்க பழகிக் கொண்டவள் என்பன போன்ற உண்மைகள் கவிதையின் எழுச்சிக்கும் எதார்த்தத்துக்கும் எடுத்துக் காட்டுகளாகும்.

தன் உடன் வீரர்களின் சாவின் போது இரங்கியபோதன்றி சோர்ந்துவிடாமல் இலட்சியத்தை நோக்கி ஒவ்வொரு அடியையும் முன்னெடுத்து வைத்ததுடன் மற்றையோரையும் வழி நடத்திச் செல்லும் ஆற்றலையும் அவளின் ஒவ்வொரு பாடல்களின் கருத்தும் பெற்றுள்ளன.

எனது பேனாவின் நினைவுகளின் நிகழ்காலம் நிகழ்வுகளின் எதிர்காலம்.

இத்தொடர்கள் கவிஞரின் பெருமைக்கும் நன்றி அறிதலுக்கும் உரியவையாகும்.

என்றோ ஒரு நாள் தமிழீழ விடுதலை பெற்ற போது அதற்கு நான் கொடுத்த பெறுமதி என்ன என்று கணக்குப் பார்ப்போமல்லவா? அது விருதுகளின் பெறுமதிதானே. இறுதியாக இன்னொருவேர்க்கும் அவள் கதவு அடைத்து விடவின்றி தொடருங்கள் என்ற பாணியில் எழுதாத கவிதை எல்லோருக்கும் வழிகாட்டுவதாகும். இந்நூல் சமகால சரித்திரமாகவும் பழங்காலப் பாசறைப் பாடல்களாகவும் நின்று விளங்கும்.

— தில்லைச்சிவன்

---

# நாதஸ்வர வித்துவான் கே. எம். பஞ்சாபிகேசன்

இந்த உலகத்திலே எல்லோரையும் இசைய வைப்பது இசை ஒன்று தான். இசை தன் இனிமையால் கல்லையும் புல்லையும் உருக்கும். அரசர்களாலும் ஆலயங்களாலும் ஆதரித்து வளர்க்கப்பட்ட இந்த இசைக்கலை இன்று தனியார் நிறுவனங்களின் தயவினாலேயே கணம் பண்ணப் படுகின்றது. ஈழத்தின் கலை வளர்ச்சிக்குத் தூண்டுகோலாய் விளங்கி வரும் அகில இலங்கைக் கம்பன் கழகம் இவ்வாண்டு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் இசையாராதனை விழாவில் 'இசைப் பேரறிஞர்' என்னும் விருதை வழங்க முன் வந்திருக்கின்றது. மூப்பும் ஆற்றலும் இவ்விருது பெறுவதற்கான அடிப்படைகள் என கழகம் முடிவு செய்துள்ளது. அந்த வரிசையில் முதன்மை பெறும் பேறுபெற்றவரான தென்மராட்சியைச் சேர்ந்த முது பெரும் நாதஸ்வரக்கலைஞர் திரு. மு. பஞ்சாபிகேசன் திகழ்கிறார்.

நெடுதுயர்ந்த தோற்றம், வாரிமுடிந்த அழகிய குடுமி; சிரித்த முகம், அமைதியான பார்வை, அடக்கமான பேச்சு, போன்றவை இவரது தோற்ற முத்திரைகள்.

1924 இல் பிரபல தவில் வித்வான் முருகப்பாவிற்கும்,



சின்னப்பிள்ளைக்கும் மூத்த மகனாகப் பிறந்த இவர் தவில் வித்துவான் நடராஜ சுந்தரத்தின் தமையனார் ஆவார். திருவாளர்கள் அப்புலிங்கம், சண்முக சுந்தரம், மல்லாகம் இராசையா ஆகியோரிடம் ஆரம்ப சிட்சை பெற்ற இவர் தொடர்ந்து தென்னகத்தில் திருவாவடுதுறை இராஜரட்ணம் பிள்ளையின் மருகரான நடராஜசுந்தரத்திடமும் ஐயம்பேட்டை வேணுகோபால பிள்ளையிடமும் இசைபயின்று தன் திறமையை வளர்த்துக் கொண்டார். இன்றைய இளந் தலைமுறை நாதஸ்வர வித்துவான்களுள் சிறப்புப் பெற்று விளங்கும் நாகேந்திரன் இவரது மூத்த புதல்வர். இளைய மகன் விக்னேஸ்வரனும் தந்தை வழியையே பின்பற்றுகின்றார்.

சுரஞான திலகம், இசை வள்ளல் நாதஸ்வரகலாமணி, நாதஸ்வரகான வாருதி ஆகியவை இவருக்கு ஏற்கனவே வழங்கப்பட்ட பட்டங்கள். பாங்கொக், மலேசியா, சிங்கப்பூர், இந்தியா போன்ற கடல் கடந்த நாடுகளிலும் தன் இசையாற்றலை நிரூபித்தவர் இவர். ஈழத்திலும் தனக்கென ஒரு ரசிகர் கூட்டத்தை உடையவர். பஞ்சாபிகேசன் வாசிக்கின்றார் என்றவுடன் திரண்டு கூடும் ரசிகர் கூட்டம் இதற்கு அத்தாட்சி.

இத்துணை சிறப்புமிக்க கலைஞருக்கு 'இசைப்பேரறிஞர்'' விருது வழங்கிக் கம்பன் கழகம் கௌரவிப்பது மிகப் பொருத்தமே அரசவிருதுகள் தமிழர்களைப் புறக்கணிக்கின்றன. கிடைக்கும் ஒருசில விருதுகளும் தகுதி திறமை அடிப் படையிலின்றி தனிமனித செல்வாக்கினால் நிர்ணயிக்கப்படுகின்றது இதனால் திறமைமிகு கலைஞர்கள் தளர்ந்து முடங்கிப்போகின்றனர். இவ்வாறு நலிவுறும் நம்மரபுக் கலைகள் இதுபோன்ற விருதுகளால் புத்துயிர் பெறும் என்பதில் ஐயமில்லை.

## இவ்வாண்டின் 'இசைப் பேரறிஞர்' விருது பெறுகின்றார்

வாழ்க இசைப் பேரறிஞர் பஞ்சாபிகேசன்

வளர்க கம்பன்கழகத்தின் நற்பணிகள்.

வி. குமாரசாமி

# தென்னையில் கருவண்டுத் தாக்கமும் அதன் கட்டுப்பாடும்

ஜெ. சத்தியேந்திரன்
தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்

யாழ். மாவட்டம் உட்பட தென்னை வளரும் பிரதேசங்களிலும் தென்னையில் உள்ள ஒரு முக்கிய பீடை கருவண்டு ஆகும். இதனைக் காண்டாமிருக வண்டு எனவும் அழைப்பர். விஞ்ஞான முறைப்படி இதற்கு 'ஒறிக்ரஸ் றைனோசிரஸ்'' என அறியப்பட்டுள்ள பெயராகும் இதனால் முதிர்ந்த மரங்களுக்கு உண்டாகும் சேதம் கொல்லக்கூடியது அல்ல என்றாலும் இளம் கன்றுகளும் நாற்றுகளும் வளர்ச்சியில் அதிகமான அளவு பின்னடைகின்றன. சில வேளைகளில் இறப்பு நேரிடுவதும் உண்டு.

தென்னை நாற்று அல்லது கன்றுகளின் முளையின் அதாவது குருத்தின் அடியிலுள்ள மென்மையான பாகத்தை வளர்ந்த வண்டுகள் துளைப்பதனால் சேதத்தை ஏற்படுத்துகின்றன. முதிர்ந்த வண்டு குருத்தின் பாகத்தைச் சேதப்படுத்துவதனால் ஏற்படும் தனித்தன்மை வாய்ந்த வெட்டுக் குறிகள் (கத்தரிக்கோலால் வெட்டியது மாதிரி) உள்ளதை இலைகள் விரிவடையும் போது வெளியாகும். வண்டு விளைவித்த சேதத்தினால் நாற்றுக்களில் விருத்தி அடைந்துவரும் இலைகள் அனேகமாகத் தடைப்படும். இதனால், இலைகள் ஒழுங்கின்றியும் விகாரமடைந்தும் உருவாகும்.

## கருவண்டினை இனங்காணுதல்

கருவண்டு சுமார் 30 – 40 மி.மீ. நீளமும், 20 மி.மீ. அகலமும் உள்ள பழுப்பு கலந்த கறுப்பு நிற உடலுடையது. தலையில் பிரதானமாகக்கூம்பியகொம்பு பின்நோக்கி இருக்கும்.

சிதையும் தாவரப்பொருள்கள், உக்கும் தென்னை, பனைமரக் குற்றிகள், சேதன எருக்குவியல்கள், தும்புத்தூள், மரத்தூள் முதலியவற்றில் சிறிய வெள்ளை நிற உருண்டையான முட்டைகளைப் பெண் வண்டு இடும். புழுக்கள்தோன்றி சேதனப்பொருள்களை உண்ணும். புழுப்பருவம் சுமார் 3 மாத காலம் நீடிக்கும். முற்றாக வளர்ந்த 60 மி.மீ. நீளமான புழுக்களை இலகுவாக அடையாளம் காணலாம். இதனையே நாம் 'கொறவணன் புழு'' என்று அழைப்பதுமுண்டு. இறுதியாக புழுக்கள் கூட்டை உண்டாக்கும். 3 - 4 வாரங்களுக்குப் பின்பு பருவமடைந்த வண்டு வெளிவரும். யாழ் பிரதேசத்திலும் சில இடங்களில் தென்னை மரத்தின் அடியில் மரத்தூள் கொட்டி விடுகின்றார்கள். இது முற்றிலும் தவறான செய்முறையாகும். ஏனெனில் கருவண்டு பல்கிப் பெருகுவதற்கு இது சாதகமாக அமைந்து விடுகின்றது. எனவே இதனை நிறுத்துதல் அவசியம். தண்டு உண்டாகியுள்ள இளம் மரங்களில் கருவண்டால் சேதம் அடைந்த பின்பு செவ்வண்டுத் தாக்கம் நிகழும். கருவண்டு உண்டாக்கிய காயத்தில் செவ்வண்டு முட்டைகளை இடும். இதனால். அதாவது செவ்வண்டுத் தாக்கத்தினால் ஏற்படும் சேதம் மரத்தையே இறப்பு விளைவிக்கக்கூடியது.

## கட்டுப்பாட்டு வழிமுறைகள்

கருவண்டினால் சேதம் ஏற்பட்டுள்ளதா? என முதலில் அறிய இளந்தோட்டங்களை அடிக்கடி சோதனை செய்தல் வேண்டும். பருவநிலை வண்டுகளை குருத்துப் பகுதியினுள் இருந்து உலோகத்தினாலான கூரிய கொழுக்கியினால் குத்தி எடுக்கலாம்.

கருவண்டைக் கட்டுப்படுத்துவதற்கு தோட்டத்தை நல்ல சுத்தமாகவும், மரக்குற்றிகளை அகற்றியும் வைத்திருத்தல் அவசியம். முக்கியமாகச் சிதைந்த மரக் குற்றிகளிலும், வேறு தாவரப்பொருள்களிலும் இப்பீடை இனவிருத்தி செய்யும். அவ்வாறான இனவிருத்தி செய்யும் இடங்களை முற்றாக அழிப்பது அவசியம். தென்னங்குற்றிகளைவேலிக்கு எல்லையாகப் பாவித்தால் முறையாகத் தயாரித்து மேற்பக்கத்திற்காவது தார் பூசுதல் வேண்டும் மூடுபயிரும்வண்டுத் தாக்கத்தினைக் குறைக்கும்.

கருவண்டினால் சேதம் பரவலாக ஏற்பட்டிருந்தால், கீழ்க்குறிப்பிடப்படும் பூச்சி நாசினிகளில் ஒன்றால்நாற்றுக்களையும் இளம் கன்றுகளையும் மரத்தையும் மாதம் இருமுறை சிபார்சு செய்யப்பட்ட பூச்சி நாசினியைக் கைத்தெளி கருவி உதவிகொண்டு குருத்தினுள் விசிற வேண்டும். பொடியான அல்லது தூளான பூச்சி நாசினி உபயோகிக்கும் போது அதனைக் குருத்துப்பாகத்தினுள் தூவி விடுதல் நல்லது.

## ஓசோன்

விட 60 சதவீதம் அழிவு ஏற்பட்டுள்ளது. உஷ்ணவலயங்களில பெருமளவில் பாதிப்பு ஏற்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

ஓசோன் கவசத்திற்கு ஏற்படும் சேதத்தைப்பற்றி 1985 இல் வியன்னா மாநாட்டில் தெரிவிக்கப்பட்டது. 1987 இல் மொன்றியாலில் கூடிய50 நாடுகளுக்கிடையில் குளோரோ புளோரோ காபன்களின் உற்பத்தியை கைவிடுவது தொடர்பான ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்பட்டது. இதன்படி இவற்றின் உற்பத்தி 2000 ஆம் ஆண்டில் முற்றாக கைவிடப்படும்.

தற்பொழுது இவற்றுக்குப் பதிலாக ஐதரோ குளோரோ புளோரோ காபன்கள் (H C F Cs) பாவிக்கப்படுகின்றன. ஆனால் விஞ்ஞானிகள் 5 - 6 வருடங்களில் ஏற்படும் பாதிப்பு இதனால் 60 - 70 வருடங்களாகப் பின்தள்ளப்பட்டுள்ளது என கருத்துத் தெரிவிக்கின்றனர். அதாவது இவையும் குறிப்பிடத்தக்க அளவு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதாகும்.

ஓசோன்களின் அழிவு ஒரு நன்மையான பக்க விளைவையும் ஏற்படுத்தியுள்ளது என தெரிவிக்கப்படுகிறது. அதாவது பூமியின் வெப்பநிலை உயர்வை 20 – 25 சதவீதம் கட்டுப்படுத்தியுள்ளது. ஆனால் இதன் கருத்து அவற்றின் அழிவு நன்மையானது என்பதல்ல,

ஓசோன் கவசத்திற்குப் பாதிப்பை ஏற்படுத்தும் குளோரினை எவ்வாறு கட்டுப்படுத்தலாம் என்பது பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பெருமளவு புறப்பேன், ஏதேன் போன்ற ஐதரோ காபன் வாயுக்களை விமான மூலம் கொண்டு சென்று வளி மண்டலத்தில் விடுவதன் மூலம் குளோரினை கட்டுப்படுத்தலாம் என ஒரு விஞ்ஞான சஞ்சிகை கருத்துத் தெரிவித்துள்ளது.

ஓசோன் கவசத்தைத் தகர்க்கும் இரசாயனங்களை பெருமளவில் உற்பத்தி செய்து பாவிக்கும் செல்வந்த நாடுகள் அவற்றின் உற்பத்தி, பாவனையைக் குறைப்பதாக இல்லை. மூன்றாம் உலக நாடுகள் விற்பனைக்காகத் தயாரிப்பதை தடைசெய்யவே அவை முயற்சிக்கின்றன.

எது எவ்வாறாயினும் பாதிப்படையப் போவது எல்லோருமே. ஐ. நாவின விஞ்ஞானிகள் குழுவின் அறிக்கை 1980 களை விட 1990 களில் ஓசோன் கவசத்திற்கு மிக வேகமான பாதிப்பு ஏற்படுகிறது என தெரிவிக்கிறது.


## தமிழீழ காவல் துறை
## வெற்றிடங்கள்

01. சாரதி (வாகனம் செலுத்துபவர்)/மெக்கானிக்
இலேசான பாரமான வாகனங்கள்
கல்வித் தகைமை: 8ஆம் வகுப்பு
வயது: 18-40 வரை
அனுபவமுள்ளவர்கள் சான்றிதழ்களுடனும் வாகனம் செலுத்தும் அத்தாட்சிப் பத்திரங்களுடனும் 13-01-92 திங்கள் காலை 9-00 மணிக்கு தமிழீழ காவல் துறையின் நாவலர் வீதியில் உள்ள தலைமைச் செயலகத்திற்கு நேரில்வரவும்.

02. காவலர் (பொலிஸ்)/ சிறைக் காவலர்
கல்வி 8ஆம் வகுப்பு சித்தி
வயது: 18–30 வரை
உயரம்: 5 அடி 6அங்
சான்றிதழ்களுடன் 13-01-92 திங்கள் காலை 9.00 மணிக்கு தமிழீழ காவல் துறையின் நாவலர் வீதியில் உள்ள தலைமைச் செயலகத்திற்கு நேரில் வரவும் ஆண் / பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம். ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் விண்ணப்பிக்கத் தேவையில்லை.

பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

(சி3762)



## கம்பியூட்டர் கல்வி

* BASIC
* LOTUS 1-2-3
* d BASE III+
* WORD STAR 2000+

புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன:

வடமராட்சியில்
15-01-1992 [திங்கள், புதன், வெள்ளி]
18-01-1992 [சனி, ஞாயிறு]

யாழ். நகரில்:
22-01-1992 [திங்கள், புதன், வெள்ளி]
25-01-1992 [சனி, ஞாயிறு]

[செய்முறை பயிற்சிகள் யாவும் ஜெனரேட்டர் உதவி கொண்டு வழங்கப்படும்]

யுனிக்கோ
கம்பியூட்டர்
சென்ரர்,
சதாபொண்ஸ்
அல்வாய் கிழக்கு,
அல்வாய்.




யுனிக்கோ
கம்பியூட்டர்
சென்ரர்,
37, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/3748)


## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



## கப்டன் அஜித்தா
(செல்வி கந்தையா சுகுணராணி)

திதி: 10 - 01 - 1992

தாயின் மடியில்: 22 - 05 - 1968
தமிழீழ மண்ணில்: 22 - 12 - 1990

இரத்தம் சிந்தி இன்னுயிர் காக்கும்
இந்நறுங் கனியமுதம் இப்போ திங்கில்லை
பரந்தநல் இதயமுடை மானிடர் வாழ்வில்
மாபெரும் தியாகம் காட்டிய சுடர்நீ
தரத்தினிற் தமிழர் தன்னலம் விரும்பாத்
தாயகம் போற்றும் தாயினும் புகழாளர்
நிச்சயம் உங்களின் இலட்சியம் வெல்லும்
இகத்தினில் செந்தமிழ் இனமுள்ள வரையிலும்
அசைத்திட முடியாப் புகழ்கொண்ட புலியே!
வெல்வருன் அணியினர் விண்ணிருந்து காண்பாய்.

வீரச்சாவடைந்த எமது மகளின் தலைத் திதி வைபவம் இன்று (10-01-92) எமதில்லத்தில் நடைபெறவுள்ளதால் போராளிகள். நண்பர்கள். உறவினர்கள் அனைவரையும் இதில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வரதன் இல்லம்,
சுகுணராணி வீதி,
அரசடி, சங்கத்தானை,
சாவகச்சேரி.

நினைவுடன் என்றும் வாழும்
பெற்றோர், சகோதரர்கள்
உறவினர், நண்பர்கள்

2087

# புலிகளின் சர்வதேச விவகாரங்கள்;
# இந்தியாவின் கவனம் திரும்பியுள்ளது

இந்தியாவின் கவனம் தற்பொழுது விடுதலைப் புலிகளின் சர்வ தேச விவகாரங்கள் குறித்துத் திரும்பியது. விடுதலைப் புலிகளின் உறவுகள் மேற்கு ஐரோப்பாவிலும் - பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி, சுவீட்ஸ்சலாந்து - தென்கிழக்கு ஆசியாவிலும் - மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்திலும் - வலைப் பின்னல் அமைப்புக் கொண்டதாக இருக்கின்றது என இந்தியா கருதுகின்றது.

இது குறித்து இந்தியப் புலனாய்வுத் துறையினர் மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளுக்கு விஜயம் செய்து அங்குள்ள உளவுத்துறை அதிகாரிகளுடனும் பொலிஸ்இலாகாக்களுடனும் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். மேற்குறிப்பிட்ட நாடுகளில் உள்ள தமது நாட்டுத் தூதுவர்கள் மூலம் விடுதலைப்புலிகளின் நடமாட்டத்தைப்பற்றி தகவல்களைத் திரட்டுவதில் அக்கறையாகவும் உள்ளனர். அத்தோடு இந் நாடுகளிடம் உத்தியோக பூர்வமாகவும் விடுதலைப் புலிகளின் நடமாட்டத்தையும் செயற்பாடுகள் பற்றியும் தகவல்களைத் தந்துதவுமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதேவேளை விடுதலைப் புலிகளின் சர்வதேச உறவு குறித்து அண்மையில் டில்லி சென்ற சிறிலங்கா வெளி அமைச்சர் ஹேரால்ட் ஹேரத்துடனும் இந்திய வெளிவிவகார அமைச்சர் மாதவராவ் சோலங்கி பேச்சு நடத்தியுள்ளார். இப்பேச்சின்போது விடுதலைப் புலிகளின் சர்வதேச தொடர்புகளைக் கண்டறிய ஒருங்கிணைந்த முயற்சிகள் மேற்கொள்வதுபற்றி பிரஸ்தாபிக்கப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

ராஜீவ்காந்தியின் கொலையுடன் சம்பந்தப்படுத்தி விடுதலைப் புலிகளின் சர்வதேச உறவுகளைக் கண்டறியும் இந்தியாவின் நடவடிக்கையானது தனியாக ராஜீவ்காந்தி மரணத்துடன் சம்பந்தப்பட்டவர்களைத் தேடும் படலம் என்பது மட்டுமல்ல. விடுதலைப்புலிகளின் சர்வதேச உறவுகளைத் துண்டிப்பதன் மூலம் புலிகளின் நடவடிக்கையைக் கட்டுப்பண்ணுவதும் பணியவைப்பதுமே இந்தியாவின் நோக்கமாகும்.

> தென்னாசியாவிற்கு முன்னுதாரணமான, தமிழீழப் போராட்டத்தின் தனித்துவமான, சுயமான போக்கைக் கண்டு இந்தியா அஞ்சுகின்றது. தென்னாசிய தேசிய இனங்களின் எழுச்சிக்கும், விடுதலைக்கும் விடுதலைப் புலிகளின் போராட்ட வரலாறு எடுத்துக்காட்டாக வந்துவிடுமோ என்பதே அச்சத்திற்கான காரணமாகும்.

தமிழரின் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு எப்பொழுதுமே இந்தியா தடையாகவே இருந்துவந்தது. போராளிகளைக் குறிப்பாக விடுதலைப் புலிகளை வற்புறுத்தி தனது வழிக்குக் கொண்டுவருவதே இந்தியாவின் நோக்கமாகும். இதற்காக இந்தியா சாம, பேத, தான, தண்டம் ஆகிய சகல வழி முறைகளையும் கடைப்பிடித்தும் பார்த்தும் விட்டது. ஆனால் அவை சாத்தியப்பட்டதாக இல்லை. தற்பொழுது விடுதலைப் புலிகளின் சர்வதேச உறவுகளை உடைத்தெறிவதன் மூலம் புலிகளைப் பலவீனப்படுத்த எண்ணியுள்ளது.

## புலிகளின் சர்வதேச உறவு

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் இந்தியாவின் பங்கு எவ்வாறு இருக்கும் என்பதை புலிகள் ஆரம்பத்திலேயே தெளிவாக புரிந்திருந்தனர். இதில் இலங்கைத் தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்திற்கோ அன்றி தமிழீழம் அமைவதற்கோ இந்தியா எப்பொழுதுமே ஆதரவாக இருக்கப்போவதில்லை என்பது ஒன்று.

மேலும் இந்தியாவை மீறி தென்னாசியப் பிராந்தியத்தில் எந்த நாடும் வெளிப்படையாகவோ அன்றி மறைமுகமாகவோ பகைத்துக் கொண்டு பெரிய உதவிகளை செய்யப்போவதில்லை என்பது இரண்டாவது விடயம் ஆகும்.

இந்த நிலையில் தான் இந்தியாவை மட்டும் நம்பியிராமல் சர்வதேச ரீதியாகத் தமது தொடர்புகளை விவரித்துக் கொள்ளுவதில் விடுதலைப் புலிகளும் ஆரம்பம் முதலே ஆர்வம் காட்டியதாகத் தெரிகிறது. இதுதொடர்பாக விடுதலைப்புலிகள் முன் முயற்சிகளையும் எடுத்தனர் விடுதலைப்புலிகளின் தனிப்பட்ட திறமை காரணமாக அதில் குறிப்பிடக்கூடிய முன்னேற்றம் கண்டனர்என்றே குறிப்பிடலாம்.

விடுதலைப்புலிகளின் சர்வதேச உறவின் விருத்தி தனது வரையறைக்குள் நின்று விடுதலைப் போராட்டத்தை விடுதலைப்புலிகள் நடத்த வேண்டும் என்ற இந்தியாவின் திட்டத்தை முறியடித்தது. புலிகள் சுயமாக தமது காலில் நின்று போராட்டத்தை நடத்த கூடிய சக்தியைப் பெறுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தியது.

## தென்னாசியாவில் தனித்துவமான புலிகள்

விடுதலைப் புலிகளின் தியாகங்களும் அர்பணிப்புக்களும் செயற்பாடுமிக்க தலைமையும் சர்வதேச உறவுகள் அவர்களை தென்னாசியாவில் ஓர் தனித்துவமான விடுதலைப் போராட்ட இயக்கமாக மாற்றியது. தென்னாசியாவில் முக்கிய போராட்டங்கள்இடம் பெறும் பஞ்சாப் காஷ்மீர் போராளிகளுக்கு பாகிஸ்தான் போன்ற நாடுகளின் நேரடி ஆதரவு இருந்து வருகின்றது. தொடரான ஆயுத விநியோகமும் பயிற்சியும் வேறு தேவைகளும் அவற்றின் ஊடாகக் கவனிக்கப்பட்டும் வருகின்றது பாகிஸ்தானிலுள்ள முகாயிதீன் கெரிலாக்களிடம் இருந்தும் அவர்கள் ஆயுதங்களைப் பெறுகின்றனர்

இதன் காரணமாக இப் போராட்டங்கள் வரையறைக்குட்பட்டவை யாகவும் கட்டுப்பாட்டுடன் கூடியவையாகவுமே உள்ளன; இருக்க முடியும்.

> தென்கிழக்காசியாவிலும், மேற்கு ஐரோப்பாவிலும் உள்ள விடுதலைப் புலிகளின் தொடர்புகளை அழித்து விட்டால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை தோற்கடித்து விடலாம் என இந்தியா கருதுகின்றது.

இன்று பஞ்சாப் காஷ்மீர் போராட்டங்களுக்கு பாகிஸ்தான் எவ்வளவு தான் ஆதரவு காட்டிவரினும் இந்தியாவில் இருந்து அவை பிரிந்து தனி நாடாக உருவாக அது உதவுமா என்பது கேள்விக்குரியதே.

காஷ்மீர் ஒரு நாடாக உருவாவதற்கு ஆரம்பம் முதலே பாகிஸ்தான் பெரியளவில் ஆதரவு தெரிவிக்கவில்லை. இந்தியாவின் கீழே உள்ள காஷ்மீர்பகுதி பாகிஸ்தானுடன் இணைக்கப்படவேண்டும் என்பதேஅதன் நோக்கமாகும். காஷ்மீர்பகுதி தனிநாடாக ஆகுமானால் தற்பொழுது பாகிஸ்தானின் கீழ் உள்ள அஸாத் காஷ்மீர் பகுதியை காஷ்மீர் பாகிஸ்தானிடம் இருந்துகோரும்என்பது பாகிஸ்தானுக்கு நன்கு தெரியும். இதே போன்று பஞ்சாப்பும் ஒரு நாடாக உருவாகுமானால் பாகிஸ்தானிலுள்ள பஞ்சாப் பிலும்பிரிவினைக் கோரிக்கை உருவாவதை தடுக்கமுடியாது.

இந்நிலையில் பஞ்சாப் காஷ்மீர் போராட்டங்களுக்கு உதவிவரும் பாகிஸ்தான் ஒரு நிலைக்கு மேல் - இந்தியாவில் நெருக்கடிகள் தீவிரமடையும் வரையும் உதவக்கூடுமேஒழிய- ஒருபோதும் காஷ்மீர், பஞ்சாப் சுதந்திர நாடாக ஆவதற்கு உதவுமென எதிர்பார்க்க முடியாது. இவ்வேளையில் பஞ்சாப், காஷ்மீர்ப் போராட்டங்கள் பாதிப்பிற்கு உள்ளாவதும் தவிர்க்க முடியாத ஒன்றாகவே இருக்கும்.

ஆனால், விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளை தென்னாசியாவில் உள்ள எந்த நாடும் தனிப்பட்ட ரீதியில் கட்டுப்படுத்த முடியாத நிலையே தற்பொழுது உள்ளது. போராட்டத்தைத் தொடர்ந்து சொந்தக் காலில் நடத்தக்கூடிய ஆற்றலை புலிகள் பெற்றுள்ளனர்.

இந் நிலையினை இந்தியா இப்பொழுது கவனத்திற் கொண்டுள்ளது. தமிழரின் தேசிய இனப்போராட்டத்தை ஒரு கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதானால், விடுதலைப் புலிகளின் சர்வதேச உறவுகளைக்கட்டுப் பண்ணுவதும், அவர்களின் வெளிநாடுகளின் தொடர்புகளை அழித்து விடுவதற்கும் இந்தியா முற்படுகின்றது.

உலகில் நிகழ்ந்துவரும் மாற்றங்களுடன், தென்னாசியாவில் ஒரு தனித்துவமான சுயேச்சையாகச் செயற்படும் ஓர் விடுதலை அமைப்பு இருப்பது இந்தியாவைப் பொறுத்து மிகவும் ஆபத்தானது என இந்தியா கருதுகின்றது. ஆனால், இந்தியா ஆளும்வர்க்கம் விரும்பியோ விரும்பாமலோ அன்றித் தென்னாசிய ஆட்சியாளர்கள் விரும்பியோ விரும்பாமலோ தென்னாசியாவில், தேசிய இனப்போராட்டங்கள் எழுச்சி பெறுவதும், அவை தமது சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக் கொள்வதும் தவிர்க்கமுடியாத நிகழ்வுகளாகவே இருக்கும். அதேவேளை அதற்கு முன்னோடிப்போராட்டமாக தமிழீழ விடுதலைப் போராட்டம் அமையும் என்பதிலும் சந்தேகமில்லை.

- ஜெயராஜ்

---

# எயிட்ஸ் நோயாளர்களை இல. செல்ல ஆலோசனை

(கொழும்பு)

எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட சில வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வந்திருப்பதாகச் சுகாதார அமைச்சு அதிகாரிகளுக்கு அதிர்ச்சி தரும் செய்தி கிடைத்துள்ளது.

இன்னும் சில வருடங்களுக்குள் நிச்சயமாக இறக்கப் போவதைத் தெரிந்துகொண்ட வெளிநாட்டு எயிட்ஸ் நோயாளர்கள் சிலர், தமது டாக்டர்களின் ஆலோசனைப்படியே உல்லாசப் பயணங்களை மேற்கொண்டு வெளிநாடுகளுக்கு விஜயம் செய்வதாகவும் அந்த அதிகாரிகள் தமக்குத் தகவல் கிடைத்திருப்பதாகக் கூறியுள்ளனர்.

இதுகுறித்துக் கருத்துத்தெரிவித்த சுகாதார அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் 'இச்செய்தி எமக்குப் பெரும் அதிர்ச்சியை தந்துள்ளது. எயிட்ஸ் நோயாளருக்கு ஆலோசனை வழங்குவது மருத்துவ விதிமுறைகளுக்குப் பாரதூரமான செயலாகும். எயிட்ஸ் போன்ற பயங்கர நோய்கள்பரவ ஊக்கமளிக்கக் கூடாது'' எனத்தெரிவித்தார்.

இது குறித்து கண்டுபிடிக்கப்பட்ட நோயாளர்களின் தாய் நாடுகளுடனும், உலக சுகாதார தாபனத்துடனும் தாம் பேச்சுவர்த்தை நடாத்த யோசித்து வருவதாகவும் தெரிவித்தார்.

# சிறுவர்கள் 'விபச்சாரம்' இலங்கை முன்னணியில்

(நியூயோர்க்)

சிறிலங்காசிறுவர்கள் விபச்சாரத்தில் ஆசிய நாடுகளில் தாய்லாந்துக்கு அடுத்த படியில் உள்ளது.

ஆசிய நாடுகளில் 'பாலியல் சுற்றுலா' பிரபலமடைந்திருப்பதாக சென்ற மாதம் நியூயோர்க்கில் கூடிய அரச சார்பற்ற நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது. தாய்லாந்து, சிறிலங்கா, பிலிப்பயின்ஸ், இந்தியா ஆகிய நாடுகளில்சுற்றுலாப் பயணிகள் பாலியல் தேவைகளுக்குக் சிறுவர்கள் பலியாக்கப் படுவதாக அந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப் பட்டது. மேற்படி நாடுகளில் மனித நேய சேவைகளில் ஈடுபட்டிருக்கும் அரசசார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதி ஒருவரே இத் திடுக்கிடும் தகவலை வெளியிட்டார். தாய்லாந்தில் சுமார் 4,60,000 சிறுவர் விபசாரிகளும், சிறிலங்காவில் 80,000 முதல் 1,00,000 சிறுவர் விபச்சாரிகளும்உள்ளனர் என்று அந் நிறுவனத்தின்பிரதிநிதி மேலும் தெரிவித்தார்.

சிறிலங்கா உட்படப் பல ஆசிய நாடுகளில் விபச்சாரம், பாலியல் படங்கள், பாலியல் வன்முறைகளுக்கு சிறுவர்கள் ஆளாக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" பிஷப், மக்கள் எதிர்ப்பு

(கொழும்பு)

'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' அஞ்சல் நிலையம்அமைப்பதற்கும், ஹோட்டல் அமைப்பதற்கும் சிலாபத்தைச் சேர்ந்த அப் பிரதேச மக்களும், ரோமன் கத்தோலிக்க பிஷப் மார்க்கஸ் பெர்னான்டோவும் ஆட்சேபம் தெரிவித்து இவற்றை நிறுத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

இங்கு ஹோட்டல் அமைப்பது என்பது எயிட்ஸ், விபச்சாரங்கள் மற்றும் பலவகை ஒழுக்கக் கேடுகள் பெருக இடமளிக்குமென்றும் 'வொய்ஸ் ஒவ் அமெரிக்கா' நிலையத்தினால் சம்பந்தப்பட்ட பகுதியில் வாழும் மக்கள் வெளியேற வேண்டி ஏற்படும் எனவும் ஜனாதிபதியிடம் பிஷப் மார்க்கஸ் பெர்னான்டோ எடுத்துக் கூறியதாக தெரியவருகிறது.

அத்துடன் இந்த இரு நடவடிக்கைகளும், புலனாய்வுநடவடிக்கைகளுக்கான வசதிகளையே ஏற்படுத்திக் கொடுக்குமெனவும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

எனவே இந்த இருதிட்டங்களையும் நிறுத்துமாறு கோரி சம்பந்தப்பட்ட பகுதிகளில் வாழும் மக்கள் ஆட்சேபணை, பிரார்த்தனை கூட்டங்களை கடந்த மூன்று மாதங்களாக நடாத்தி வருகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய அரசில் செவர்னாட்சேக்குஇடம்

ஜோர்ஜியாவில் இராணுவத்தின் ஆதரவுடன் ஆட்சி அமைக்க இருக்கும் புதிய அரசில் சோவியத் ரஷ்யாவில் முன்பு வெளியுறவு அமைச்சராக இருந்த எட்வாட் செவர்னாட்சே தானும் இடம்பெற உள்ளதாக கூறி உள்ளார்.

# எயிட்ஸிற்கு எதிராக திருச்சபை பிரசாரம்

(நீர்கொழும்பு)

எயிட்ஸ் நோய் பற்றி ஜாக்கிரதையாக இருக்கும்படி கத்தோலிக்க திருச்சபை நீர்கொழும்பிலும், புறநகர்ப்பகுதிகளிலும் பிரசார இயக்கம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. நட்சத்திர ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலா விடுதிகளுக்கருகில் எயிட்ஸ் நோய் அபாயம் பற்றி எச்சரிக்கும் பெரிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. துர்நடத்தைகளில் ஈடுபடும் வேண்டத்தகாதவர்களிடமிருந்து தூர விலகி நடக்கும்படியும் இளைஞர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளார்கள்.

எயிட்ஸ், போதைவஸ்து, சமூகத் துர்நடத்தைகளிலிருந்து இளைஞர்களைப் பாதுகாக்கும்படியும் சுவரொட்டிப் பிரசாரம் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

கருத்தரங்குகள் புகைப் படக் கண்காட்சிகள், துண்டுப் பிரசுரங்கள் மூலமும், ஞாயிற்றுக்கிழமைகளில் திருப்பூசைப் பலியின் இடையில் நடைபெறும் பிரசங்கங்களின் போதும் எயிட்ஸ் நோய்பற்றி கத்தோலிக்க மதகுருமார் பிரசாரம் மேற்கொள்வதாக தெரியவருகிறது.

நீர்கொழும்புப் பகுதியில் வேண்டத்தகாத வெளிநாட்டவர்களின் நடமாட்டம் அதிகரித்திருப்பதால் அப்பகுதியில் கண்காணிப்பை மேற்கொள்ள குடாப்பாடுவையில் விசேட பொலிஸ் நிலையம் ஒன்றும் நிறுவப்பட்டுள்ளது.

# டடா சட்டத்தின் கீழ் தி. மு. க. அமைச்சர் கைது

(சென்னை)

தமிழகத்தின் முன்னாள் அமைச்சரும் திராவிட முன்னேற்றக்கழக தலைவர்களில் ஒருவருமான திருமதி சுப்புலெட்சுமி ஜெகதீஷன் 'டடா' சட்டத்தின் கீழ் நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார் என தமிழக காவல் துறை அறிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு அளித்ததாகவும், 1990 ஆம் ஆண்டு இறந்த பத்மநாபா வழக்கில் இவர் சம்பந்தப்பட்டதாகவும் இவர் மீது குற்றம் சாட்டப்பட்டு கைதுசெய்யப்பட்டுள்ளார்.

ஈரோடு அருகே கலிங்கையன் பாளையத்தில் உள்ள அவரது இல்லத்தில் திருமதி சுப்புலெட்சுமியுடன் அவரது கணவர் திரு. ஜெகதீஷனும் 'கியூ' பிரிவு பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பின்னர் இவர்கள் திருச்சிக்கு கொண்டுவரப்பட்டு ராஜீவ் காந்தி கொலை வழக்கை விசாரித்து வரும் சிறப்பு நீதிபதி சித்தீக் முன்னிலையில் ஆஜர் செய்தனர். அவர் இவர்களை இந்தமாதம் 30 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். பின்னர் மதுரை மத்திய சிறையில் வைக்கப்பட்டுள்ளனர்.

இதேநேரம் தமிழகத்தின் முன்னாள் உள்துறை செயலாளர் நாகராஜனை மார்ச் மாதம் 3 ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்குமாறு நீதிபதி சித்தீக் உத்தரவிட்டுள்ளார்.

அத்துடன் இதே வழக்கில் சம்பந்தப்பட்ட வேறு 13 விடுதலைப் புலிகள் என சந்தேகிக்கப்படும் உறுப்பினர்களையும் மார்ச் மாதம் 3ஆம் திகதி வரை நீதிமன்றக் காவலில் வைக்கும்படி அவர் உத்தரவிட்டுள்ளார்.

## சீமெந்து ஊழியர் சம்பளம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்களினது மார்கழி மாத சம்பள கொடுப்பனவுகள் இன்று (10 - 1 - 92) காலை முதல் சுன்னாகத்தில் உள்ள தற்காலிக அலுவலகத்தில் வைத்து வழங்கப்படும் என அந்நிறுவன உதவிப் பொது முகாமையாளர் அறிவித்துள்ளார்.

## மீன்பிடிக்கச் சென்ற மூவரைக் காணவில்லை

(யாழ்ப்பாணம்)

கல்முனை,பாலைதீவு ஆகிய கடற்பகுதிகளுக்கு மீன் பிடிக்கச் சென்ற மூன்று மீனவர்களைக் காணவில்லை.

கடந்ததிங்கட்கிழமைமேற்படி கடற்பகுதிகளுக்கு அ. சுரேஸ் (வயது 20), அ. அப்புக்குட்டி (வயது 15), ரா. கொலிசன் (வயது 15), ஆகிய மூவரும் சிறியரக பிளாஸ்ரிக் வள்ளம் ஒன்றில் சென்றனர். இவர்கள் இதுவரை கரைக்குத் திரும்பவில்லை. இவர்கள் சிறிலங்கா இராணுவத்தினால் கைது செய்யப்பட்டார்களா என்பதை உறுதி செய்யமுடியவில்லை.

## மட்டு. ஆஸ்பத்திரியில் மருந்துத் தட்டுப்பாடு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மருத்துவமனையில் விசர்நாய்க் கடிக்கு ஏற்றும் ஏ.ஆர்.வி மருந்துக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இதனால் 43 நோயாளர்கள் ஊசி மருந்து ஏற்ற முடியாத நிலையில் பெரும் அவஸ்தைக்குள்ளாகி உள்ளனர். மேலும் இவ்வைத்தியசாலையில் குடும்பதிட்ட சத்திரசிகிச்சை செய்துகொண்டவர்களுக்கு வழங்கப்படும் பணமும் வழங்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேபோல என்றுமில்லாத வகையில் மட்டக்களப்பில் நுளம்பு தொல்லையும் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

### வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் நேற்று காலை 6.45 மணியளவில் சந்திவெளித்திடல் என்னுமிடத்தில் பதுங்கியிருந்த சிறிலங்கா இராணுவத்தினர் தாக்கியதில் 2ஆம் லெப்டினன்ட் ஜோசப் (செல்லத்துரைசுதாகரன்-அக்கரைப்பற்று),விக்கினேஸ்வரன் அல்லது பரமானந்தன் (கணபதிப்பிள்ளை கணேஸ்-பொத்துவில் 5ஆம் குறிச்சிஅக்கரைப்பற்று) ஆகிய வீரவேங்கைகள் வீரச்சாவை தழுவிக்கொண்டனர் இவர்களுக்கு விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றனர்.

### பிரிட்டன்

பிரிட்டனிலிருந்து தொடர்ந்தும் சிறிலங்கா அரசாங்கம் இராணுவ உபகரணங்களை பெற்றுக்கொள்கின்றது. பிரிட்டனில் உடனடியாக கிடைக்கக் கூடிய இயந்திர, ஆயுதங்களை வாங்கவே சிறிலங்கா விரும்புகிறது என்றும்,

பிரிட்டனின் முன்னாள் தூதுவர் டேவிட்கிலாஸ்ரன் விவகாரத்திற்குப்பின் 3 வாரங்களுக்கு மட்டுமே பிரிட்டனுடனான உறவு பாதிப்படைந்து இருந்தது. ஆனால் பின்னர் நெருங்கிய உறவை வளர்த்துக் கொண்டோம். என்றும்

இராணுவ உதவிகளைப் பொறுத்தவரை எந்தவித உதவியையும் பெற்றுக்கொள்ளக் கூடியதாக உள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

### யாழ்ப்பாண.

மாநாட்டில் அவர் இதனை தெரிவித்தார்.

யாழ் குடாநாட்டை தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர படையினர் தயார்நிலையில் உள்ளனர். அவர்கள் கூடிய விரைவில் குடா நாட்டிற்குள் பிரவேசிக்க உள்ளார்கள். வட-கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதை பாதுகாப்பு படையினர் எதிர்க்கவில்லை. இயன்றளவு விரைவாக வடக்கிலும் கிழக்கிலும் சகஜநிலையை ஏற்படுத்துமாறு அவர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது.

### அம்பாறையில்

உதவியாக 36ஆம் கிராமஇராணுவமுகாமிலிருந்துஒரு கனரக வாகனத்துடன் வந்த 150க்கு மேற்பட்ட இராணுவத்தினரை வழிமறித்து விடுதலைப் புலிகள் தாக்குதல் மேற்கொண்டனர். இவர்கள் மீது விடுதலைப் புலிகள் 50 கலிபர் மற்றும் நவீனரக ஆயுதங்கள் கொண்டு தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலின் போது கவச வாகனம் சேதமடைந்தது. அதிலிருந்த சிறிலங்கா இராணுவத்தினர்சிலர் காயமடைந்தனர்.

இம்மோதலின்போது உலங்கு வானூர்தி ஒன்று 50 கலிபர் தாக்குதலை மேற்கொண்டபோதும் இராணுவத்தினரால் தொடர்ந்து முன்னேற முடியவில்லை. இத்தாக்குதல் 45 நிமிடங்கள்நடைபெற்றது.

இதேவேளை பாலையடி வெட்டை இராணுவமுகாமிலிருந்தும் 35 ஆம் கிராம இராணுவ முகாமிலிருந்தும் வெளியேறிய இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகளின் மற்றோர் அணி தாக்குதலை மேற்கொண்டது. இத்தாக்குதல் 15 நிமிடநேரம் நடைபெற்றது இத்தாக்குதலில் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

பாலையடிவெட்டை அதிரடித்தாக்குதலின் போது விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட நவீனஆயுதங்கள்:

- ★ ஏ. கே. எல்.எம்.ஜி. - 01
- ★ ரம் மகசீன் - 01
- ★ ஏ. கே, எல். எம். ஜி. லிங் - 450
- ★ ரி.56-2ரகத்துப்பாக்கி -04
- ★ ரி. 81 ரகத்துப்பாக்கி -03
- ★ ரி.56 புதியரகத்துப்பாக்கி -01
- ★ ரி 56 ரகத் துப்பாக்கிக் குரியரவைக் கூடுகள் - 14
- ★ ரி. 81 ரகத் துப்பாக்கிக் குரிய ரவைக்கூடுகள் - 16
- ★ தொலைத்தொடர்புச் சாதனம் - 01
- ★ திசைகாட்டி - 01
- ★ 7·62 நடுத்தர ரவைகள் - 1300
- ★ ஜே. ஆர். கைக்குண்டு-03
- ★ தொலைகாட்டி - 01

## தமிழக அமைச்சரவையில் 2 ஆவது தடவை மாற்றம்

(சென்னை)

தமிழக அமைச்சரவையில் சிறிய மாற்றங்களை செய்துள்ளதாக தமிழக முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அறிவித்துள்ளார்.

இதன்படி முதலமைச்சர் பொறுப்பிலிருந்த வணிகவரித்துறை வருவாய்த்துறை அமைச்சர் எஸ். டி. சோமசுந்தரத்திடமும், கால்நடை பராமரிப்பு பால்வளம் ஆகிய துறைகள் ஆதிதிராவிட நலத்துறை அமைச்சர்எம் ஆனந்தனிடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக ஜெயலலிதா தெரிவித்தார்.

இது குறித்த விடயங்களை தான் தமிழக ஆளுநர் பீஷ்ம நாராயணசிங்கிடம் நேற்றுக் காலை ஒப்படைத்ததாகவும் அவர் இதை ஏற்றுக்கொண்டதாகவும் ஜெயலலிதா தெரிவித்தார்

எழு மாத கால ஆட்சிக்குள் செல்வி ஜெயலலிதா இரண்டாவது முறையாக அமைச்சரவையில் மாற்றம் செய்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுடலைக் கிணற்றில் இளைஞனின் சடலம்

இனந்தெரியாத இளைஞன் ஒருவரின் சடலம் நாவற்குழியில் உள்ள ஆயிலியடித் திட்டி பழைய சுடலையில் காணப்படும் பாழடைந்த கிணற்றில் இருந்து தமிழீழக்காவற்றுறையினரால் மீட்கப்பட்டது.

சுமார் 28 வயது மதிக்கத்தக்கதும் 5 அடி 6 அங்குல உயரம் உடையதாகவும், கருமையான உடல், தடித்த உதடு, பரந்த முகம், நெடுக்கமான நெற்றிப்புருவம், உரோமம் நிறைந்த மார்பு, மூன்று அங்குலம்வரை நீளமுள்ள சுருளற்ற தலைமயிர் ஆகியவற்றை கொண்டிருந்ததுடன் மூன்று நாட்கள்வரை சவரம் செய்யப்படாத தாடியும் இச்சடலத்தில் காணப்பட்டது இளம் கருமை நிறமுடைய நீளக்கால் சட்டையும், இள நீல நிறக் கோடுகளால் பெட்டிபெட்டியாகஉள்ள வெள்ளைப்பொலியஸ்ரர் துணியாலான நீளக்கைபுடைய சேட்டும் அணியப்பட்டிருந்தது.

இச்சடலத்தின் வலதுகணுக்காலில் சிறிய காயம் ஏற்பட்ட தழும்பு காணப்பட்டது.

இந்த இளைஞன் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இனம் காணப்படாத இச்சடலத்தை அடையாளம் காட்டக் கூடியவர்கள் சாவகச்சேரி தமிழீழக் காவல்துறையினருடன் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்

### பெண்கள் மீது

அதேவேளை பெண்கள் மீது தாக்குதல் நடாத்துபவர்கள், தாக்குதல் நடாத்த முயற்சிப்பவர்கள் மீதும் தாக்குதலுக்கு உடந்தையாக இருப்பவர்கள் மீதும் தமிழீழக் காவல்துறையினரால் கடும் ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தமிழீழக்காவல்துறைப் பொறுப்பாளர் திரு. நடேசன் அறிவித்துள்ளார்.

மேலும் தங்கநகை மோசடி, மற்றும் தரம் குறைந்த தங்க நகைகளைஏமாற்றி விற்பனை செய்தல் போன்றவற்றிற்கு எதிராகவும் தமிழீழக் காவல் துறையினரால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

மேற்படி குற்றச்செயல்கள் தொடர்பான பொதுமக்களின் முறைப்பாடுகளிற்கு உடனடியாக நடவடிக்கைகளை எடுப்பதில் தமிழீழக் காவல்துறையினர் தீவிர கவனம் எடுத்து வருகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### மூன்று

கூட்டங்களில் எடுக்கப்படும் முடிவுகளைப் பொறுத்தே யாழ்ப்பாண விஜயம் அமையும் என்றும்-

புலிகளுடன் பேசி ஒரு முடிவுக்கு வருவதில் வெற்றிகாண முடிந்தால் ''சண்டையா, சமாதானமா?'' என்று அரசிடம் கேட்கவுள்ளேன். சமாதானத்தை அரசு விரும்பினால் அதற்கான சிறிது விலை செலுத்தத்தான் வேண்டும். இதற்கான முடிவொன்றை எடுப்பது அரசின் பொறுப்பாகும் என்றும் அமைச்சர் தொண்டமான் தெரிவித்தார்.

## தேயிலை வர்த்தகத்தில் வீழ்ச்சி

(கொழும்பு)

ஈராக், ரஷ்யா முதலிய முக்கிய தேயிலை வாங்கும் நாடுகள் இலங்கை தேயிலை கொள்வனவை நிறுத்தியுள்ளதை அடுத்து உலகசந்தையில் தேயிலையின் விலையும் அதிகளவு வீழ்ச்சி அடைந்துள்ளது. இதனால் விலை வீழ்ச்சியைத் தடுத்துதேயிலைக்கு கூடுதல் விலைபெறும்பொருட்டு,தேயிலைக்குசந்தை தேடிதோட்டத் தொழில் அமைச்சர் ரூபா கருணாதிலக்கா அராபிய நாடுகளுக்கு சுற்றுப் பயணம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமைதோறும் இடம்பெறும் வாராந்தக் கருத்தரங்கு எதிர்வரும் ஞாயிற்றுக் கிழமை (12-1-92) காலை 10·00மணிக்கு கோண்டாவிலிலுள்ள கலை, பண்பாட்டுக்கழகதலைமைச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இவ்வார கருத்தரங்குஅமர்வில் கவிஞர் இ. முருகையன் அவர்கள் ''எனது இலக்கிய அனுபவங்கள்'என்னும்பொருளில் கருத்துரைவழங்குவார்.

## தற்கொலை

குடும்பஸ்தர் ஒருவர் நேற்று கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்துகொண்டார் அவர் கட்டுவன் தெற்கு தெல்லிப்பளையைச் சேர்ந்த அன்னலிங்கம் (வயது 42) என்பவவராவர்.


## 2வது ஆண்டுநினைவஞ்சலி



மேஜர்
சோதியா

(முதலாவது
மகளிர்படைத் தளபதி)

இடம்: நெ. ம. ம. வி.

காலம்: 11-01-1992

நிகழ்ச்சி நிரல்:

காலை 8.00 மணி - வீதி திருத்துதல்
10.00 மணி - இரத்ததானம்
மாலை 3.00 மணி - உதைபந்தாட்டம்
7.00 மணி - நினைவஞ்சலிக் கூட்டமும் நாட்காட்டி வெளியிடுதலும்
9.00 மணி - கலை நிகழ்ச்சிகள்

அனைவரையும் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

விடுதலைப் புலிகள்
(2090) மகளிர் முன்னணி


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.